சுதேசமித்திரன்

4—7—48

விலை 4 அணா



THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுடவார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

கல்யாணத்திற்கு வேண்டிய பட்டு ஜவுளி
தினுசுகள் ஏராளமான டிஸைன்களில்
சரஸமான விலைகளில் கிடைக்குமிடம்

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188.)

ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ்.

R. K. ராதாகிருஷ்ண செட்டியார்,
R. K. சாரநாத செட்டியார்,
புரொப்ரைட்டர்ஸ்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

லோடஸ் ஹனி

சுத்தமான லோடஸ் ஹனி எல்லாவிதமான கண் வியாதிக்கும் குணம் தருவதாகும். மங்கலான பார்வை, கண்ணில் நீர் வடிதல் மற்றும் பல வியாதிகளையும் நீக்குவதுடன், முறைப்படி உபயோகித்தால் பார்வையும் தீக்ஷண்யமாகும்.

புட்டி விலை ரூ. 1-4-0.

தேசபந்து ஹர்பல் ஹோம்,
Deshbandhu Herbal Home,
7, Ganga Prasad Mukerji Road,
Bhowanipore, Calcutta 25.

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.
9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள் பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உறை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ் 1.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோவில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை சென்டுகளும், ஹேர் ஆயில்களும், வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்,

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ்டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:	லக்ஷ்மி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே மதராஸ்.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த

"3001" ஜவ்வாது பத்திகள்

இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த

"301" ஜவ்வாது பத்திகள்

நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த

"31" ஜவ்வாது பத்திகள்

ஆரோக்கிய வாழ்விற்கு

"ஆசாத்" பாக்கட் பத்திகள் &

"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,

நெ. 39, லெக்ஷிமிபுரம், 6-வது தெரு, மதுரை.

பிராஞ்சு:— நெ. 147, பழைய கஸ்ஸாய் ரோடு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்--செகந்திராபாத்

பெஜவாடா — மதுரை.

Lovely long hair



100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St.
Royapuram, Madras.



45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புறுக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினுல் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறேரும்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

சக்தி ஆருடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிருர்:—

“ தாங்கள் எனக்கு மேமீ 27-ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது.”

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8.
1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

“ சுதேசமித்திரன் ” புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம் „ ரூ. 2.
மூன்றும் பாகம் „ ரூ. 2.

(தபாற் செலவு அணு 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். V. P. P. அனுப்புவது கிடையாது

மானேஜர் :- சுதேசமித்திரன் புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆனி௴ 21௳ ★ 1948-௵ ஜூலை௴ 4௳ No. 23

ஹிந்துஸ்தானி

சென்னை மாகாணத்தில் ஹிந்துஸ்தானிபாட போதனையைப் பொறுதது சர்க்கார் பிறப்பித்த விசித்திரமான உத்திரவை நேயர்கள் நன்கறிவர். தமிழ்நாட்டைத் தவிர, ஆந்திரா, கேரளா,. கர்நாடகம் முதலிய பிரதேசங்களிலெல்லாம் ஹிந்துஸ்தானி கட்டாய பாடமாக விருக்குமென்பது மேற்படி உத்திரவின் பொருள்.

ஹிந்துஸ்தானி தேசத்தின் பொது பாஷை. அந்த முறையில் அதை இம்மாகாணத்தில் போதிக்கவேண்டுமானால் தமிழ்நாட்டை மட்டும் ஏன் விலக்கவேண்டும்? பிரதம மந்திரியும், கல்வி மந்திரியும் இது குறித்துத் தெரிவித்த சமாதானத்தை ஏற்பதற்கில்லையென்பதுடன் அவர்கள் கூறும் காரணங்கள் வியப்பையே ஊட்டும்.

தமிழ்நாட்டில் ஹிந்துஸ்தானியைக் கட்டாயமாக்கக்கூடாதென்று எதிர்ப்புக் கோஷ்டியிருக்கிறதென்பதைக் கல்வி மந்திரி சுட்டிக்காட்டி, இஷ்டபாடமாக்கிவிட்டால் அவ்வெதிர்ப்புக்கு இடமிராதென்று சமாதானம் கூறினார். இஷ்ட பாஷையென்று சொன்னதும் அவர்களுடைய ஆட்சேபனை மாயமாக மறைந்து விடுவதாயிருந்தால், அவ்வாட்சேபனையின் போலித்தன்மைக்கு அதைவிட வேறு ருசு வேண்டியதில்லை. அவ்வாட்சேபனை அந்தரங்கமானதானால், வெறும் சொல்வித்தையால் அதை அசைத்துவிடமுடியாது.எனவே அவர்களைத் திருப்திசெய்யத்தான் தாங்கள் இவ்வாறு ஏற்பாடு செய்திருப்பதாக சர்க்கார் சொல்வது விசித்திரமாகும்.

உண்மையில் சர்க்கார் தங்கள் வேலைமுறைகளை உருவாக்குகையில் நியாயம் எது, எது அறிவுக்கொத்தது, பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெறக்கூடியவை எவை இவற்றையே முக்கியமாகக் கவனிக்கவேண்டும். ஹிந்துஸ்தானியைப் பொறுத்தவரை, இவ்வளவுக்கும் ஒத்த ஒரு ஏற்பாடு தமிழ்நாட்டிலும் அதைக்கட்டாயபாஷையாக்குவதுதான் என்பதை கல்வி மந்திரியே பட்டவர்த்தனமாக ஒப்புக்கொள்ளுகிறார். தமிழ்நாட்டுச்சிறுவர், சிறுமியர் அனைவரும் அப்பாஷையைக் கற்பது அத்தியாவசியம்; அப்பாஷையைக் கற்பவர்களுக்கு பொது வாழ்வு, உத்தியோகம் முதலிய துறைகளில் தனிப்பட்ட அனுகூலமுண்டு என்று கல்வி மந்திரி சுட்டிக்காட்டியதோடு நிற்கவில்லை. உடனடியாகவே சர்க்கார் உத்தியோகங்களுக்கு ஹிந்துஸ்தானி பற்றிய அறிவை அதிகப்படியான ஒரு யோக்கியதையாக விதிப்பதுபற்றி சென்னைசர்க்கார் ஆலோசித்து வருவதாகவும் அறிவித்துள்ளார். மேலும் ஹிந்துஸ்தானியைக் கட்டாய பாஷையாக்குவதென்ற ஏற்பாட்டுக்கு தமிழ்நாட்டில் மிக்கப்பெருவாரியான மக்களின் ஆதரவுண்டு;அதை எதிர்ப்பவர்கள் ஒரு சிலர்தான் என்பதும் தாமறிந்ததே என்பதை கல்வி மந்திரி காட்டிக்கொள்ளாமலில்லை. எனினும் இந்த ஒரு சிலரின் அர்த்தமற்ற எதிர்ப்புக்கே தாங்கள் பணிந்தாகவேண்டும் என்று சர்க்கார் எண்ணுவதுதான் விநோதம்.

சர்க்காரின் இந்த விபரீத ஏற்பாட்டைப் பற்றி தமிழ்நாட்டில் கண்டனங்கள் வெளியாகவில்லையே என்றுபிரதமமந்திரிகூறுகிறார். நேர்வழி எது என்பது திட்டமாகத்தெரிந்திருந்தும், மாறுவழியில் சென்று கண்டனங்களுக்காகக் காத்திருப்பது சர்க்காரின் பெருமையை உயர்த்துவதன்று. மேலும் பல இடங்களிலிருந்து ஏற்கெனவே இதுபற்றி தீவிரமான கண்டனம் வெளியாகியுமிருக்கிறது. சென்னை ஜில்லா அரசியல் மகாநாட்டைப்போன்ற கூட்டங்களிலும் இதுபற்றி

—அடுத்த பக்கம்

லேடி மவுண்ட் பாட்டனையும், பமீலா மவுண்ட் பாட்டனையும், பிரதம மந்திரி நேரு புதய டில்லி விமான கூடத்தில் வழியனுப்பினர்.

பலமான கண்டனம் வெளியாகியிருக்கிறது. ஹிந்துஸ்தானி கட்டாய பாஷையாகவேண்டுமென்பதே மிக்கப் பெரும்பாலான தமிழர்களின் கோரிக்கை என்பது தெளிவு. எனவே மேற்கொண்டு வீண் சமாதானம் எதுவும் தேடாமல், அக்கோரிக்கைக்கு ஒத்தவாறு சர்க்கார் துங்கள் உத்தரவை மாற்றுவதே முறை.

மற்றொரு அம்சத்திலும் சர்க்கார் தங்கள் உத்தரவைத் திருத்துவது அவசியமாகும். அவ்வுத்தரவுப்படி, தமிழ்நாட்டைத் தவிர மற்ற பகுதிகளிலும் ஹிந்துஸ்தானி கட்டாய பாஷையாகிவிடவில்லை. ஹிந்துஸ்தானி, ஸம்ஸ்கிருதம், உருது, அராபிய பாஷை ஆகியவற்றில் ஏதாவதொன்றைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்பதே அதில் கண்ட ஏற்பாடு. எனவே ஸம்ஸ்கிருதம் அல்லது அராபிய பாஷை கற்க விரும்புவோர் ஹிந்துஸ்தானி கற்பதற்கில்லை. சர்க்காரின் அடிப்படையான நோக்கத்தையே இது கெடுக்கக்கூடியதாகும். ஹிந்துஸ்தானியை மாகாண முழுதும் கட்டாய பாஷையாக்கி, அதோடு ஸம்ஸ்கிருதம் போன்ற பாஷைகளில் ஏதாவதொன்றை இஷ்ட பாஷையாகக் கற்க விரும்புவோருக்கு தக்க வசதியளிப்பதே சிறந்த ஏற்பாடு என்பதை சர்க்கார் உணரவேண்டும்



'ஏன் அங்கேயே நின்று எட்டிப் பார்க்கிருய்? ருக்கு ஊருக்குப் போகவில்லை. எல்லாரும் இருக்கிருர்கள். வரலாம் வா' என்று தெருவில் நின்று எட்டிப் பார்த்த சரோஜாவைக் கூப்பிட்டாள் பானு.

'எதற்கும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். ஏன் போகவில்லை?' என்று கேட்டாள் உள்ளே வந்த சரோஜா.

'போவதற்கு எல்லாம் சித்தமாகி பெட்டி படுக்கைகளையெல்லாம் டாக்ஸியில் ஏற்றிவிட்டு, வண்டியில் ஏறப் போனேம். அப்பொழுதுதான் பெரியப்பா வந்து சேர்ந்தார்'என்ருள் ருக்கு.

'ஏன், பெரியப்பா வருவதற்கும், உங்கள் பிரயாணம் நிற்பதற்கும் என்ன சம்பந்தம்?' என்ருள் சரோஜா.

'பெரியப்பாவின் கடைசிப் பிள்ளை ராமு இந்த வருஷம் எஸ். எஸ். எல். சி. பரீக்ஷைக்குப் போயிருந்தான்'

'போகட்டுமே!'

'நாங்கள் மாத்திரம் வேண்டாம் என்கிருேமா என்ன?'

'பின் என்னவாம்?'

'ஒரு வாரமாய்ப் பையனைக் காணவில்லையாம்.'

'ஏன், பைலாய்ப் போய்விட்டானு?'

'பாஸ் பண்ணிவிட்டான்'

'பைலாய்ப் போய்விட்டால் வீட்டில் தாயார் தகப்பனுர் சிநேகிதர்கள் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுக்கொண்டு மானத்தில் திருஷ்டியுள்ள பிள்ளைகள் எங்காவது தகவ வில்லாமல் ஓடிவிடுங்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். பாஸ் பண்ண பையன் ஓடிவிட்டானென்ருல் இதென்னமோ விசித்திரமாகத்தான் இருக்கிறது.'

'அவன் பாஸ் பண்ணதும் விசித்திரமாக இருக்கிறது. ஆகையால் ஓடிவிட்டதும் விசித்திரமாக இருக்க வேண்டியதுதானே?' என்ருள் பானு.

'என்னடி புதிர் போடுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே' என்ருள் சரோஜா.

'காலத்தையொட்டி எத்தனையோ வேடிக்கைகள் நடப்பதுபோல இதுவும் ஒரு வேடிக்கை. முதலில் பத்திரிகையில் எஸ். எஸ். எல். சி. ரிஸல்டு வந்ததாம். அதில் ராமுவின் (பெரியப்பாவின் பிள்ளை) நெம்பரைத் தேடித் தேடிப் பார்த்தார்களாம். அகப்படவே இல்லையாம். ராமுவுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. தாயார், தகப்பனுர் முகத்தில் விழிக்க அவமானத்துடன்கூடப் பயம் வேறு சேர்ந்துகொண்டது அவ்வளவுதான். சாப்பிடுகிற வேளைக்கு ராமுவைக் கூப்பிடப்போனல் பேர் வழியைக் காணேம். அங்கே இங்கே, என்று ஒரு இடம் பாக்கி இல்லாமல் எல்லாம் தேடியாகி விட்டது. எங்கேயும்

''……தூக்கி வாரிப்போட்டதாம்……..''

ருக்கு சொல்லுகிறாள்

★

'அம்மாடி' வெயில் கஷ்டம் தீர்ந்தது. மழை கொட்டு கொட்டெனக் கொட்டப்போகிறது. கௌஸல்யாவின் மனமே திரும்பிவிட்டதென்றால் உலகிலேயே ஒருபெரும் புரட்சிதான்; என்றேன் நான் அங்கு வந்த கௌஸல்யாவைப் பார்த்துவிட்டு

நான் சொன்னதின் கருத்தை அவ்வளவு சீக்கிரம் புரிந்து கொள்ள முடியவில்லையோ என்னவோ கௌஸல்யா பதில் சொல்லாமலே நின்றுகொண்டிருந்தாள்.

ரங்காரெட்டியாரின் குடும்பமே பரம்பரையாக, தெய்வ பக்தி, ஆசார அனுஷ்டானம், சாஸ்திரங்களில் நம்பிக்கை ஆகியவைகளுக்குப் பேர் போனது. அதற்கு ஒரு களங்கம் திருஷ்டி பரிகாரம் மாதிரி கௌஸல்யா ஏற்பட்டாள் என்பது அவர்களுடைய மனக்குறை. குழந்தையிலிருந்தே கௌஸல்யா நாகரீகத்திலேயே மூழ்கியுள்ள தனது மாமன் வீட்டில் வளர்ந்துவிட்டாள். 'வடக்குமலையான்' (திருப்பதி வெங்கடாசலபதி) ரங்காரெட்டியாரின் குல தெய்வம். ஒவ்வொரு குழந்தைக்கும் அங்கே சென்று மொட்டையடித்தாக வேண்டும். இதற்கு கௌஸல்யா இணங்கவில்லை. மூடப் பழக்கம் என்று மறுத்துவிட்டாள்.

அப்படிப்பட்டவள் மொட்டையடித்துக்கொண்டு வந்து நின்றதால் பிரமித்துப்போய்விட்டேன். 'நிஜமாகவே கண்களை நம்பமுடியவில்லையடி. கௌஸல்யாதானா?' என்று அவள் தலையைத்தொட்டுப் பார்த்தேன். அடுத்த க்ஷணமே அவள் தலையிலிருந்து கருப்பு வலை யொன்று கையுடன் வந்தது. இப்பொழுது பார்த்தால் கௌஸல்யா அழகிய முடிச்சுடன் நின்றுகொண்டிருக்கிறாள்.

''அட, கடவுளே! இது ஒரு கூத்தா? திருப்பதி மொட்டைக்கும் இதற்கும் ஒரு வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் கௌல்யா அதை மூடப் பழக்கம், அநாகரிகம் என்றும், இதை நாகரிகம் என்றும் சொல்கிறாள்!

காணோம். 'அப்பா, காலம் கெட்டுக் கிடக்கிறது. அங்கங்கே எத்தனையோ பசங்கள் பரீக்ஷையில் தவறிய அவமானம் தாளாமல் குளம், குட்டையில் விழுந்தும், விஷத்தைச் சாப்பிட்டும், சுருக்குப் போட்டுக் கொண்டும், பிராணனை மாய்த்துக் கொள்ளும்கதைகளை அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். நம்ம ராமு அப்படியெல்லாம் செய்ய மாட்டான். சொல்வதற்கும் அச்சான்யமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் காலம் கெட்டுக் கிடக்கிறதைப் பார்த்தால் இப்படியெல்லாம் யோசிக்கவேண்டியதாக இருக்கிறதடா அப்பா, எதற்கும் குளம், குட்டைகளைப் பார்த்துவிடுங்கள் என்றாளாம் எங்கள் பாட்டி. புறக்கடைக் கிணறு, குளம் எல்லாம் தேடிப்பார்த்துவிட்டார்களாம். எங்கேயும் காணோமாம்,' என்றாள் ருக்கு.

'ஒருவேளை உங்கள் மாமா ஆத்துக்குப் போய்விட்டானோ என்னமோ?' என்றாள் சரோஜா.

'மாமாவாத்துக்குத் தந்தி அடித்துக் கேட்டார்களாம். அங்கே இல்லையென்று பதில் வந்துவிட்டதாம். பெங்களூரில் எங்கள் சித்தப்பா இருக்கிறார். அங்கே வேறு தந்தி அடித்தார்களாம். அங்கும் இல்லையென்று பதில் வந்துவிட்டதாம். மீதி அவன் எங்கே போவான் என்று சந்தேகம் இருந்ததோ அங்கேயெல்லாம் போய் பார்த்து விட்டார்களாம். எங்கேயும் காணோமாம். கடைசியாகப் பெரியப்பா இங்கே வந்து சேர்ந்தார். நாங்கள் பிரயாணம் புறப்படுவதற்கும், அவர் வருவதற்கும் சரியாக இருந்தது. இவரை (ருக்குவின் அகத்துக்காரர்) அனுப்பி தேடச் சொல்லலாம் என்று யோசனை' என்று ருக்கு சொன்னாள்.

'ஆமாம். அவன்தான் பாஸ் செய்துவிட்டான் என்றுசொன்னாய் முதலில். இப்பொழுது பைலாகிவிட்டான் என்று சொல்கிறாயே! ஊருக்குப் போகும் பிரயாணம் நின்றுவிட்டதில் புத்தி 'தடமாட்டம்' ஏற்பட்டு விட்டதா என்ன?' என்றாள் சரோஜா.

'எனக்கு ஒன்றும் புத்தி தடமாட்டமில்லை. ஒருவேளை அந்த ரிஸல்டை வெளியிட்டார்களே அவர்களைக் கேட்டுப்பார்த்தால் தெரியுமோ என்னவோ. முதல்நாள் பத்திரிகையில் ராமுவின் நெம்பர் வரவில்லை. அப்புறம் உபஜாப்தாக்கள் பல வெளியிட்டு வந்தார்களே, அதில் ராமுவின் நெம்பர் விட்டுப்போய் விட்டதென்று சொல்லி பாஸ் செய்து விட்டதாக வெளியிட்டிருந்தார்கள்.' என்றாள் ருக்கு.

'பாவம், முதல் நாள்பத்திரிகையைப் பார்த்துவிட்டு பைல் என்றுதீர்மானித்துக் கொண்டு ஓடிவிட்டது' என்றாள் சரோஜா.

'நீ சொல்லவே ஞாபகம் வருகிறது. முதலில் பைலாகி பிறகு பாஸானகதையைச் சொன்னாய். முதலில் பாஸாகி பிறகு பைலான ஒரு கதையைச் சொல்கிறேன் கேள். எங்கள் பக்கத்தகத்தில் கோபாலன் என்று ஒருபையன் இருக்கிறான். அவன் இந்த வருஷம் எஸ்.எஸ்.எல். ஸி பரீக்ஷைக்குப் போயிருந்தான். கணக்கில் ரொம்ப மக்கு. அதற்குத் தகுந்தமாதிரி இந்த வருஷம் கணக்கு பேப்பரே கொஞ்சம் கஷ்டம் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆகவேதான் நிச்சயம் பைல்தான் என்று அவன் தீர்மானித்துவிட்டான். ரிஸல்டும் வந்தது. பேப்பரைப் பார்த்தான். அவனைத் தூக்கி வாரிப்போட்டதாம். அவன் கண்களை அவன் நம்பவே இல்லையாம். கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு, ஒருதரத்துக்கு மூன்றுதரமாகப்

பார்த்தானும் என்று பானு சொல்லி முடிப்பதற்குள், ஏன், அவனுடைய நெம்பர் பாஸ் செய்தவர்கள் வரிசையில் வந்து விட்டதாமே?' என்ருள் சரோஜா.

'அதெப்படியடி சொல்லிவிட்டாய்? என்னதான் இருந்தாலும் சரோஜாகெட்டிக்காரி. கெட்டிக்காரிதான். எப்படியோ சொல்லிவிட்டாளே! நிஜமாகவே அதன் நெம்பர் பாஸ்செய்தவர்கள் வரிசையில் வந்திருந்தது. அவ்வளவுதான் அவனுக் சந்தோஷம் தாங்கவில்லை. தாயார், தகப்பனுர்களுக்கும் சந்தோஷத்தைச்சொல்லி முடியாது. முப்பது ரூபாயை எடுத்துக்கொண்டான். தன் சிநேகிதர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போனுன். ஒரு 'பார்ட்டி' கொடுத்தான் என்ருள் பானு.

'பாவம்! இருக்குமோலியோ! பரீக்ஷை தவறிவிடும் என்று எண்ணிக்கொண்டிருந்தவனுக்குப் பாஸ் என்று தெரிந்தால் எவ்வளவு சந்தோஷமிருக்கும்?' என்ருள் ருக்குவின் மாமியார்.

'சந்தோஷம் இருக்கும், இராது என்று சொல்லவில்லை. ஆனுல் அது நீடித்த சந்தோஷமாக இருக்கக்கொடுத்து வைக்கவில்லை. அல்ப சந்தோஷமாக அல்லவோ போய்விட்டது' என்ருள் பானு.

'ஏன் அப்படி?' என்ருள் ருக்குவின் மாமியார்.

'பைலான ராமுவை பாஸ் என்று சொன்னமாதிரி பாஸான கோபாலனை உப ஜாப்தாவில் பைல் என்று சொல்லியிருப்பார்கள். அதுதானே?' என்ருள் சரோஜா.

'உனக்கு எக்ஷிணி வந்து சொல்லிக்கொடுக்கிறது என்பது பொய்யே இல்லையடி சரோஜா. நீ சொல்வதுதான் சரி' என்ருள் பானு.

'நீதான் முதலிலேயே விஷயத்தைச் சொல்லிவிட்டுத்தானே கதையை ஆரம்பித்தாய். இதற்கு எக்ஷிணி வந்து சொல்லவேண்டுமாக்கும்' என்ருள் விமலா.

'அதெப்படியாவதுபோகிறது. இவ்வளவு பெரிய விஷயத்தில் இப்படிப்பட்ட அசிரத்தை—அஜாக்கிரதை—காணப்பட்டால், அதனுல் எவ்வளவு விபரீதம் நேர்ந்துவிடுகிறது பார்த்தாயா? பரீக்ஷை தவறி விட்டது என்று தெரிந்தவுடனே தற்கொலை செய்து கொண்டு விடுகிறவர்களும், வீட்டை விட்டு ஓடிப்போய் விடுகிறவர்களும் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். அத்துடன் இது கலியாணகாலம். கலியாணத்தன்று ரிஸல்ட் வந்தால், அதில் பாஸ் செய்த பையனின் (கலியாணப்பிள்ளை) நெம்பர் தவறுதலாக விட்டுப் போயிருந்தால் அதனுல் அவனுக்கு எவ்வளவு அவமானம்? அப்புறம் அவன் பாஸே செய்துவிட்டதாகப் பிரசுரப்படுத்தினுலும் அப்பொழுது அத்தனை பேர் மத்தியில் அவனுக்கு அவமானம் அவமானம்தானே. ஆகையால் இது ரொம்பவும் பொறுப்புடன் ஒன்றுக்குப் பத்துதரமாகக் கவனித்துப் பார்க்கவேண்டிய விஷயம். அதில் இவ்வளவு தவறுதல் நேர்ந்துவிட்டால்—அதுவும் இத்தனை வருஷங்களாக இல்லாமல் இந்த வருஷம் நேர்ந்ததென்ருல்—எல்லாவற்றையும்போல் இதுவும் ஒருவிசித்திரம்என்று நான் முதலில் சொல்லியதில் என்ன தவறு இருக்கிறது?' என்ருள் ருக்கு.

'ஒரு தவறுமில்லை. எங்கள் எதிரகத்து பையன் ஒருவன் அடுத்த ஜாப்தா எப்படியும் ஒன்று



"......எதற்கும் குளம் குட்டைகளில் பார்த்துவிடுங்கள்......"



"........ராமு இருக்கிற இடம் தெரிந்துவிட்டதடியம்மா........"

வரும். அதில் தன் நெம்பர் கட்டாயம் வரப்போகிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் சொல்வதிலும் தவறில்லை என்றுதான் நினைக்கும்படியிருக்கிறது' என்றாள் வசந்தா.

'அப்படியானால் இன்னும் பல உபஜாப்தாக்கள் வந்துகொண்டேயிருக்குமா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'யார் கண்டு வைத்தார்கள்?' என்றாள் வசந்தா.

'அது கிடக்கட்டுமடி. அத்துடன் விட்டுத்தள்ளுங்கள் அந்தக்கதையை. ஆமாம். ராமுவைப்பற்றி அப்புறம் என்ன செய்யப்போகிறீர்கள்?' என்றாள் சரோஜா.

'செய்வதென்ன. 'அப்பா குழந்தாய் ராமு! நீ பாஸ் செய்துவிட்டாய். முதலில் தவறுதலாக உன் நெப்பர் விட்டுப் போய்விட்டதாம். ஆகையால் எங்கிருந்தாலும் இதைப் பார்த்த உடனே வீட்டுக்கு வந்துவிடு. உன் தாயார் எப்பொழுதும் உன் விசாரமாகவே இருக்கிறாள். ஆகாரமே சாப்பிடாமல் அவள் துரும்பாக இளைத்து விட்டாள், அவளுக்காகவாவது நீ உடனே வந்து சேரவேண்டியது'என்று எல்லா பத்திரிகையிலும் விளம்பரம் செய்யப்போகிறார்கள். எதற்கும் 'இவர்' பம்பாய்க்குப் போகப்போகிறார். அவன் கொஞ்சம் நன்றாகப் பாடுவான். நல்ல முகவெட்டும இருக்கிறது. கொஞ்ச நாட்களாகவே சினிமாவில் அவனுக்குக் கொஞ்சம் மவுஸ் இருந்து வந்ததாம். ஒரு வேளை அங்கே போய் ஏதாவது ஸ்டுடியோவில் சேர்ந்துவிட்டானோ என்ற சந்தேகம் என்று ருக்கு சொல்லிக்கொண்டிருக்கையில் 'ராமு இருக்கிற இடம் தெரிந்து விட்டதடியம்மா' என்று சொல்லிக்கொண்டே ருக்குவின் பெரியப்பா அங்கே வந்து சேர்ந்தார்.

எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.

என் தாயைத் திருப்தி பண்ணுவதற்காகவே விவாகப் பந்தத்தில் ஈடுபட இசைந்தேன். பாவம், அவளுடைய இந்தக் கடைசி அபிலாஷையையும் ஏன் நிராகரிக்க வேண்டும்? அவளும் நாலு பேர் போல் ஒரு நாட்டுப் பெண்ணைப் படைக்க ஆசைப்பட்டாள். இயற்கையான ஆசை தான். ஆனால் பூர்த்தியாகவில்லையே என்ற கவலை. என்னுடைய செல்வ நிலையைக் கொண்டோ, தேக நிலைமையைக் கொண்டோ பார்க்கப் போனால் நான் விவாகம் செய்து கொள்ளாமல் இருப்பது தான் நல்லது.

அவள் அதைக் கவனிப்பாளா? நிலைமையை விளக்கிச் சொன்னால் அவள் துயரந்தான் அதிகரிக்கும். தன் பெண் புத்தியைக் காட்டிவிடுவாள். இராப்பகலாக அழுதும் தீர்த்து விடுவாள். ஆகவே அவள் ஆட்டியபடியே ஆடிக் கொண்டிருக்கிறேன். தாய் சொல் தட்டாத பிள்ளையாகவும் நடந்துகொள்கிறேன்.

எங்கெங்கேயோ எல்லாமிருந்து வரன் வருகிறது என்று அடிக்கடிச் சொல்லி நச்சரித்துக்கொண்டிருப்பாள். வந்த ஜாதகக் கட்டுகளையும், ஜோசியரிடம் தூக்கிக் கொண்டு கிளம்பி விடுவாள். சில ஜாதகங்கள் சரிப்படாமல் போய் விடும். சில பொருத்தமாய் அவள் மனதிற்குப் பிடித்துப் போயிருக்கும்.

நானும் ஒரு அரை "டஜன்" பெண்களைப் போய்ப் பார்த்து விட்டு வந்தேன். நான் பெண்ணை பார்த்தேன் என்று சொல்வதை விட, பெண் வீட்டுக்காரர்கள்—பெண் உள்பட—என்னைப் பார்த்தார்கள் என்பதுதான் பொருத்தமாயிருக்கும். ஒரு சிலருக்கு என்னைப் பிடித்திருந்தும் எனக்கு ஒன்றும் ஆஸ்தி இல்லையே என்று ஏதாவது சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்கள். மற்றுஞ் சிலருக்கு நான் பெரிய உத்தியோகம் பார்க்கவில்லையே என்ற குறை. இப்படியே பல பெண்கள் பொருந்தாது போயின.



என் தாய்க்குமாத்திரம் சொல்லொணா வருத்தம். "என்னக் கிரகக்கோளாறோ தெரியவில்லை. இப்படி வருகிற வரன்கள் தட்டிக் கொண்டு போகிறது" என்று கூறிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பாள். தன் மூச்சு இருக்கும் போதே எனக்கு ஒரு பெண்ணைக் கட்டிப் போட்டுவிட வேண்டுமென்பது அவள் கவலை. எனக்கோ அந்த விவாக பந்தமாகிய நிர்ப்பந்தம் வர வேண்டாம் என்ற கவலை. ஒவ்வொரு தடவையும் கல்யாணம் தட்டிக்கொண்டு போனதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் அந்த ஜீவன் என் தாய் என் நன்மையைச் சதா நாடுபவளின் துயரத்தின் சிகரத்தை எப்படி அளவிட்டுச் சொல்லமுடியும்?

மற்றுமொரு வரன் திருவையாறிலிருந்து வந்தது. ஜாதகமும் அம்மா ரீதிப்படிப் பொருந்தியிருந்தது. என்னையும் பெண்ணைப் பார்த்துவிட்டு வரும்படி அனுப்பினாள். போனேன்; பார்த்தேன். எளிய குடும்பம் நல்ல மனுஷாள்; பெண்ணும் தங்க விக்கிரகம்; செயற்கை அலங்காரமின்றித் தன் அழகுடன் சோபித்துக்கொண்டிருந்தாள். என்னை அவர்களுக்குப் பிடித்திருந்தது. என் உத்தியோகம், அந்தஸ்து, ஆஸ்தி எல்லாம அவர்களுக்குப் பிடித்திருந்தது. என்னைப்போல் அவர்களும் எளியவர்கள். யாரும் கர்வப்படுவதற்கு வழியில்லை. ஊருக்குட

போய் அம்மாவுடன் கலந்து யோசித்துக் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

நான் கடைசியாகப் போய்பார்த்துவிட்டு வந்த பெண்ணை மணந்துகொள்ளலாம். யாரும் தடை சொல்ல மாட்டார்கள். அம்மாவும் சொத்து, சுதந்திரத்தை விரும்பவில்லை. எப்படியாவது எனக்குக் கல்யாணமாகி, அவளும் தன் காலத்திற்குள்ளே பார்த்து அனுபவித்துவிட வேண்டுமென்றுதானே இத்தனை நாளாய் முயற்சி பண்ணிக்கொண்டு வருகிறாள்? அந்தப் பெண்ணை மணப்பதை என் மனம் தான் தடை செய்கிறது. என்னுள் அமுங்கிக்கிடக்கும் ஒரு நியாய சக்தி தடை விதிக்கிறது.

மண்ணில் பிறந்த இந்த முப்பது வருஷ காலத்தில் பத்து வருஷங்களாக என் காசையெல்லாம் அழித்து எங்கெங்கேயோ இருக்கும் ஜோதிஷ ஆசிரமங்களிலிருந்து என்னுடைய வருங்காலப்புத்தகத்தைப் படித்துப் படித்து அலுத்துப்போயிருக்கிறேன். அந்தப்புத்தகத்தின் எத்தனையோ ஏடுகளில் உண்மை நிகழ்ச்சிகளை அனுபவித்தாகிவிட்டது. எத்தனையோ பேர்கள் எனக்கு முப்பத்தைந்தாம் வயதில் ஒரு கண்டமிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரு ஜோஸ்யர்—மனச்சாட்சிக்கு விரோதம் செய்யாத தைரியஸ்தர்—நான் முப்பத்தைந்தாம் வயதையே தாண்டிவிட்டால், என்னை எழுபத்தைந்து வயதுவரைக்கும் அசைக்கமுடியாது என்று வேறு சொல்லியிருக்கிறார். ஒரு பிரதான ஸ்தானத்தை வகிக்கும் இந்த முப்பத்தைந்தாம் வயது என் வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்தாலும் வைக்கும். அன்றி மேலே வாழ்க்கையை நடத்திச் சென்றாலும் செல்லும். எனக்கோ என்றைக்கும் ஜோஸ்யத்தில் நம்பிக்கை. அனுபவத்தினால் அதிக நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

என் தகப்பனார் இசிவு நோயினால் அதிகம் அவஸ்தைப்பட்டு நாற்பதாவது வயதில் இறந்து

போயிருந்தார். என் பாட்டனாருக்கும் அதே இசிவுநோய். அவரும் அற்பாயுசாக நாற்பத்தைந்தாம் வயதில் இறந்துவிட்டார் என்று அம்மா சொல்லியிருக்கிறாள். என்னையும் இசிவு நோய் விட்டதா?

அம்மாவுக்கு அந்த நோய் விவரத்தைத் தெரியாமல் மறைத்து வைத்துக்கொண்டு வருகிறேன். இந்நோய் என்னுள் வளர்ச்சிப் பெறுவதை அறிந்தும், என்னையும் தகப்பனார் பாட்டனாருடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது, முப்பத்தைந்தாம் வயதுடனேயே என் வாழ்க்கை முடிந்தாலும் முடியலாம் என்ற நம்பிக்கை வலுப்பட்டுக்கொண்டு வருகிறது.

இருந்திருந்து நான் வாழப் போனால் ஐந்து அல்லது பத்து வருஷம் வாழப்போகிறேன். இந்த நிலையில் நான் விவாகம் செய்துகொள்வது நல்லதா? வாழ்க்கையில் இன்பத்தைக் காணக் கனவு கண்டுகொண்டிருக்கும் அந்தப்பெண்ணை நிர்க்கதியாக்கிவிடலாமா? சாம்பல் பூத்த நெருப்பை எடுத்து, அவள் உள்ளம் ஏன் வெந்து போக வேண்டும்? என்னிடத்தில் என்ன சொத்திருக்கிறது? அவளுடைய பிற்கால வாழ்க்கைக்கு அவள் வீட்டில்தான் என்னைக் கொட்டிக்கிறது அவளுடைய நிர்க்கதியான நிலைக்கு?

என்னைத் தவிர அவளுக்கு வேறு மாப்பிள்ளை கிடைக்காமலா போகிறான்? நோய்க்கும் வறுமைக்கும் ஆட்பட்டு அகால மரணமடையும் வம்சம் என்னுடனேயே அற்றுப் போகட்டும். இன்றே அவர்களுக்கு என்னைப்பற்றின உண்மைகளை எழுதிவிடுகிறேன்.

சீதாராமய்யர்

கமலாவுக்குக் கல்யாணம் பண்ணவேண்டுமென்று இந்த ஐந்துவருஷங்களாக அலைந்துகொண்டு வருகிறேன். மாப்பிள்ளையைத் தேடிப் போய் என் கால்கள்கூட தேய்ந்துவிட்டன. ஒவ்வொருதடவையும் நிச்சயமாகிவிட்டதாகத்தான் தோன்றும், என்ன செய்வது? கால வித்தியாசம், கைகூடாமல் போய் விடுகிறது. பெண்ணுக்கு வயசாகிக்கொண்டு வருகிறதே என்று நிமிஷத்திற்கு நிமிஷம் கவலை அதிகரிக்கிறது. இரவில் நிம்மதியாகத் தூங்கி எவ்வளவோ காலமாகிவிட்டது. கடைசியாக வந்த நீலகண்டன் என்ற அந்த வரன் முடிந்துவிட்டது என்று ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தேன். பையனுக்கும் சரி, அவனுடைய தாயாருக்கும் சரி மிகவும் பிடித்துப் போயிருந்தது. அன்று அவன் கமலாவைப்பார்க்க வந்திருந்தபோது எவ்வளவு நம்பிக்கையாகச் சொல்லிவிட்டுப் போனான்! கவலை நீங்கிவிட்டது என்று வீட்டில் எல்லோரும் குதூகலப்பட்டுக்கொண்டிருந்தோம்.

ஆனால் நீலகண்டனிடமிருந்து வந்தகடிதமோ எங்கள் ஆசையில் தீயை வைத்துவிட்டது, கடிதத்தைப்படிக்கப்படிக்க அழவேண்டும் போலிருக்கிறது. அத்தகைய திடுக்கிடும் சங்கதியை அது கொண்டு வந்துவிட்டது. மீண்டும் வரன்வேட்டைக்குக் கிளம்பும் படித் தூண்டிவிட்டது.

அவன் கூறிய யோசனைப்படிச் செய்துவிடுகிறேன். மனித எத்தனத்தில் என்ன இருக்கிறது? அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. தெய்வச் சங்கற்பப்படி எதுவும் நடந்துவிடப் போகிறது

பார்வதி

எனக்கு இருக்கிறது ஒரே பிள்ளை. அவனுக்கு ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டுக் கண்ணை மூடிவிட வேண்டும். அதற்காகத்தான் இத்தனை நாளாக முயற்சி பண்ணிக்கொண்டு வருகிறேன். முயற்சி பலிக்கவில்லையே என்று ஒரே கவலையாக இருக்கிறது. மனசையும் வேதனை அரித்துத்தின்கிறது.

அவர் போனபின் எப்படியோ கால் வயிறு, அரை வயிறு சாப்பிட்டுக் காலத்தையும் தள்ளியாய் விட்டது. படித்தும் ஒரு வேலையில் அமர்ந்துவிட்டான். என் மூச்சு இருக்கும்போதே ஒரு பெண்ணைப் பிடித்துக் கட்டிப் போட்டால் தான் நிம்மதியடைவேன். முடிகிற கட்டத்திற்கு வரும் கல்யாணம் எப்படியோ அறுந்து அறுந்து போய்விடுகிறதே, கடவுளே! இது என்ன சாபக்கேடு! முதலில் விவாகம் செய்துகொள்வதற்கு அவன் சம்மதத்தை வாங்குவதற்கு எத்தனை கஷ்டம். "இப்பொழுது என்ன அவசரம்" என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டுப் போய்விடுவான். அப்படிப்பட்ட அவனும் குடித்தனம் பண்ணத் துடிக்கிறான். வருகிற வரன்கள் எல்லாம் இப்படியா தட்டிக்கொண்டு போக வேண்டும்? என் ஆசையும் நிராசையாகிறதே! எனக்கோ நாளுக்கு நாள் வயசாகிக்கொண்டு வருகிறது. தள்ளாமையும் அதிகரித்து விட்டது. எனக்குப்பின் அவனைக் கவனித்துக்கொள்வதற்கு ஒரு ஏற்பாடு செய்துவிட வேண்டும். வம்சமும் விருத்தியாக வேண்டுமே. மகனும், மனைவியுமாக வாழ்வதைப் பார்த்துவிட்டேனானால் நிம்மதியாகக் கண்ணை மூடிவிடுவேன்.

தெய்வத்தின் மேல் பாரத்தைப்போட்டு ஓய்ந்து போயிருந்தேன். அப்பொழுதுதான் அந்தப் பிராமணன் வந்தார். ஜாதகத்தையும் கேட்டார். இடமும் பிடித்திருந்தது. ஆயிரம் இரண்டாயிரம் வாங்கவேண்டுமென்றிருந்த ஆசையும் வெகு நாளைக்கு முந்தியே போய்விட்டது. எப்படியாகிலும் பெண் பிடித்தமாயிருந்து சீக்கிரத்திலேயே கல்யாணம் முடிந்துவிடவேண்டும் என்ற ஆசை வைத்துக்கொண்டிருந்தேன். ஏழையாயிருந்தாலும், அவர்கள் தங்கமானவர்கள் என்று சம்மதப்பட்டேன். எப்படியும் இந்தத்தடவை பெண் நிச்சயமாகி விவாகமாகிவிடும் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தேன். அவனும் பெண்ணைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்ததும் தனக்கு இடம், மனுஷாள், பெண் எல்லாம் பிடித்து இருக்கிறது என்று வேறு சொன்னான்.

"பழய குருடி, கதவைத்திறடி" என்று இந்த இடம் கூடவாத்தட்டிப்போகணும்? "ஜாதகத்தை மீண்டும் நன்றாகக்கணித்துப் பார்த்தோம், தோஷமிருக்கிறது. இங்கே நம்பிக்கை வைக்கவேண்டாம்' என்று அந்த மனுஷர் எழுதியிருக்கிறார். என்னக் கிரகக்கோளாறோ? இன்னும் எத்தனை நாளைக்குக் காத்திருக்கவேண்டுமோ? என் கண் மூடுவதற்கு முன் அந்தக்கோலத்தையும் பார்த்துவிடமாட்டேனா?

மீனாக்ஷி

பாவம்! அவர் அலைகிற அலைச்சலைப் பார்த்தால் சாப்பாடு கூட வெறுப்பாயிருக்கிறது. எத்தனை இடத்திற்குத்தான் போய் வந்துவிட்டார். எத்தனை தடவை எங்கள் நம்பிக்கைச்சிதறிப் போய் விட்டது. ஏதாவது இரண்டாந்தார வரனுக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றால் அவருக்கு மூக்கின்மேல் கோபம் வந்துவிடுகிறது. அப்படியே எரிந்து விழுகிறார். "பிச்சை எடுத்தாலும் எடுப்பேன். நல்லதங்காள் மாதிரி எல்லாக்குழந்தைகளையும் கிணற்றில் தள்ளி விழுந்தாலும் விழுவேன். அந்தப் பேச்சை மட்டும் எடுக்காதே" என்று படபடப்புடன் பேசுகிறார். "நம் பெண் இருக்கிற லட்சணத்தைப் பார்த்துவிட்டு எவனாவது கட்டிக்கொண்டால் கட்டிக்கொள்ளட்டும், இல்லாவிட்டால் கமலம் கன்னிப் பெண்ணாகவே இருந்துவிட்டுப் போகிறாள்." என்று ஒரே பிடிவாதமாகக் கூறுகிறார். அவர் சொல்வதில் தப்பு என்ன இருக்கிறது? அவருடைய தங்கையை அம்மாதிரி கொடுத்துவிட்டுப் படுகிற அவஸ்தை போதாதா? கல்யாணமான மறுவருஷமே பிறந்தகத்திற்குத் திரும்பி வந்துவிட்டாள். அந்தப் பாவி பிராமணனும் கண்ணை மூடிவிட்டார்! கமலத்தின் நிலையை இந்தப் பாடுபடும்போது மற்ற இரண்டு பெண்களின் கதி என்னவாகிறது? இந்தக் குழந்தைகள் எல்லாம் காசி, இராமேச்வரம் என்று தவம் கிடக்கிறார்களே அவர்கள வீட்டில் பிறந்திருக்கக்கூடாதா?

கமலா

நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்? என்றால் என் பெற்றோர்களுக்குத்தான் எத்தனை கஷ்டம்? அப்பாவும் தன்னுடைய குறைந்த சம்பளத்திலும், எத்தனையோ கஷ்டத்திலும் என்னைப் பத்தாவது வரைக்கும் படிக்க வைத்து விட்டார். அவர் பென்ஷன் வாங்கிக்கொண்டவுடன் குடித்தனம் நடத்துவதுதான் எவ்வளவு கஷ்டமாகி விட்டது! வாங்கும் முப்பது ரூபாய் பென்ஷனும் எந்த மூலைக்குக்காணும். அவருக்கும் தள்ளாத வயது வந்துவிட்டது. என்னைப்பற்றின கவலையோ அவரை இன்னும்

அதிகக் கிழமாக்கிவிட்டது. அவர் உடம்பும் நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டு போகிறது. எனக்கும் தக்க காலத்தில் ஒரு கல்யாணம் என்று ஆகி அம்மா, அப்பா கவலையும் நீங்கி இருக்கக் கூடாதா?

நானும் பத்து மாப்பிள்ளைகள் முன்பு இதுவரையில் உட்கார்ந்துபாடி அலுத்துவிட்டேன். அடேயப்பா, அவர்களும் அவர்கள் மனுஷாளும் எவ்வளவு கண்டிப்பான பேர்வழிகள். இரண்டாயிரம், மூவாயிரம் என்று வாய் கூசாமல் கேட்டார்கள்.

"பெண் பிடித்திருக்கிறது. பண விஷயம் சரிப்பட்டுவந்தால் கல்யாணத்தை நடத்திவிடலாம்" என்று நிர்த்தாட்சண்யமாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். இந்தக் குழந்தை குட்டிகளை வைத்துக்கொண்டு ஒரு நாள் பொழுதை தள்ளுவதே பெரிய பாடாயிருக்கும் போது, ஏழ்மையிலேயே மூழ்கிக் கிடக்கும் என் தந்தை இரண்டாயிரம், மூவாயிரத்திற்கு எங்கு போவார்? என்னிடத்தில் அழகு இருந்தும், தகுந்த படிப்புமிருந்தும் ஒரு வாலிபனாவது துணிந்து என்னை மணந்துகொள்ள முன் வரவில்லையே என்று நினைக்கும்போது என் உள்ளம் ஒடிந்துவிடுகிறது. தங்கள் குமாரர்களை விலை பேசிக்கொண்டு திரிகிறார்களே இந்தப் பெற்றோர்கள் அவர்களைப் பற்றி என்ன சொல்வது?

ஐந்துவருஷகாலமாகக் கல்யாணம் இப்படித் தடைப்பட்டுக்கொண்டு வரும்போது, நானும் அப்பாவை உபாத்தியாயர் போதனாமுறைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடும்படி வலிக்கட்டாயப்படுத்திக்கொண்டு வந்தேன். அவரும் சம்மதித்திருந்தார். ஒரு உபாத்தியாயினியாகவே காலத்தைத் தள்ளி எங்கள் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன்.

அப்பொழுதுதான் மறுபடியும் ஒரு வரன் அப்பாவின் கண்ணில் தென்பட்டார். அவரும் வந்தார். எனக்கும் எல்லா மாப்பிள்ளைகளை விட இவர் மனதுக்கு நன்றாய்ப்பிடித்திருந்தது. என்ன வசீகரமான முகம்! என்ன தெளிவானபேச்சு! என்ன நேர்மையான குணம்! அவரை அடைவதற்கு நான் ஒரு பாக்யசாலியாகவே இருக்கவேண்டும் என்று எண்ணினேன். கடைசியில் நிச்சயமான இந்தக் கல்யாணமும் இப்படிக்கலைந்து போய்விடுமா? எங்கள் தொல்லைக்கே விமோசனம் கிடையாதா? நான் என்றென்றும் கன்னிப் பெண்ணாகவே இருந்துவிட வேண்டுமா? என்னைப்பற்றிக்கூட நான் அதிகம் கவலைப்படவில்லை. என்னுடைய மற்ற இரு சகோதரிகளைப்பற்றி நினைக்கும்போதுதான் மனம் மிகவும் சஞ்சலமடைகிறது. பகவானே! அவர்களுக்காவது காலாகாலத்தில் விவாகம் நடக்கும்படி ஏற்பாடு செய்.

இனி நானும் யார் முன்னாலும் உட்கார்ந்து பாடவேண்டாம் எனக்காக வரன் தேடும் கவலையும் அப்பாவுக்கு வேண்டாம். "பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கள். உபாத்தியாயினியாகிவிடுகிறேன்" என்று என் பழைய பல்லவியை அப்பாவின் காதில் பாடிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அவரோ திரும்பத் திரும்ப அலைந்துக் கொண்டிருக்கிறார். நானும் எத்தனை நாளைக்கு இப்படி வீட்டில் அடைந்து கிடக்க வேண்டுமோ?

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்

ஸ்ரீதாராமனுக்கு ஊரிலிருந்து சில கடிதங்கள் வந்திருந்தபடியால் அவைகளைப் படித்துக்கொண்டு அவன் தன் ரூமில் இருந்துவிட்டான். ராமனாதன் மாமாவை யோக க்ஷேமங்கள் விசாரித்தான். அன்று சாயந்திரம் சினிமாவுக்குச் செல்லம், காந்திமதி, ராமனாதன் எல்லோருடனும் மாமா சிவராமன் புறப்பட்டார். ஸ்ரீதாராமனையும் அவர் அழைத்தார். ஆனால் அவன் சாக்குச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டுப் பின் தங்கினான். மாமா, ஏமாற்றத்துடன் சென்றதாய் அவனுக்குத் தோன்றிற்று. ராமனாதன், உத்சாகமேலீட்டில் தான் வராததினால் ஏமாற்றமடைந்ததாகக் காண்பித்துக்கொள்ளவில்லை.

அன்றுவந்த கடிதங்கள் ஸ்ரீதாராமனின் மன அமைதியைக் கலைத்தன. அப்பாவின் லெட்டர் அவனைத் தலை குனியச்செய்தது. அவர் ஆகாசக்கோட்டைக்கு அஸ்திவாரம் போடுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகாசக் கோட்டை ஆகாசத்தில் உற்பவிக்கவேண்டுமேயானால் தெய்வாதீனமாய் உற்பவிக்கவேண்டும். தெய்வபலத்தினால் அந்தரத்தில் தொங்கவேண்டும். அதற்கு மண்ணைப்பறித்து அஸ்திவாரம் போட நினைப்பது எவ்வளவு மடமை? அப்பாவுக்குப் பணக்கார பூஜையில் எவ்வளவு நம்பிக்கை! ஓட்டை மணியை எவ்வளவு பலமாய் அடிக்கிறார்! வெறும் கை நிவேதனத்தை எவ்வளவு ஆடம்பரமாய்ச் செய்கிறார்! எல்லாம் பிரார்த்தனை, புரஸ்காரத்தினால் நடந்துவிடுமென்று அவருக்கு எவ்வளவு ஆசை! இது பழைய உலகத்திற்கு ஏற்றதாய் ஒருவேளை இருந்திருக்கலாம். ஆனால் இப்புது உலகத்தை அவர் ஊன்றிப் பார்க்காததுதான் தோஷம். இவ்வுலகத்தில்வழங்கும்ஒரே தத்துவம் “அஹம்' 'கொட்டை எழுத்தில்!—இந்த விராட்புருஷனுக்கு நான்கு பாதங்கள்—சுயகார்ய முன்னேற்றம், சுயலாபம், சுயப்பெருமை, சுயக்கொள்கையின் ஆக்ரமிப்பு! பகாஸுரனை ஸ்துதி செய்தோ, அவன் முன் அழுது பரிதவித்தோ அவனை ஒரு நாள் உபவாஸம் இருக்கும்படி செய்ய யாரும் நினைக்கவில்லை. ஆனால் ஆசைக்குக் கண்ணில்லை. கட்டுமில்லை! அதுவும் கொஞ்சம் தெய்வானுகூலம் ஏற்பட்டுவிட்டால் பிரும்மசாரியின் மனோரதம்போல் காலில்லாப் பந்தலை உயர்த்துவது ஸகஜமாயிருக்கிறது. ஆனால் அந்தப் பந்தலை நம்பித்தான் கூரையைப்பிய்த்தெறிந்துவிடலாமோ? அப்பா கடிதத்தில் பாதி வளைத்துக் கட்டும் ஸ்துதியும், மற்றொரு பாதி வெறுப்பும் உதாசீனமும் நிறைந்ததாயிருக்கிறதே! அனாவசியமாய் மனுஷ்யனைத்துவேஷிக்கும் அதம மனோபாவம் இவருக்கு ஏன்? தன் உயர்வு நிச்சயமாகுமுன் பிறரை வெறுப்புடன் நோக்குவது என்ன அறிவு? சோம்பேறி மனோரதங்களுக்குஎப்போதும் வாலில் விஷமில்லாமலிராது. அநேகமாய் அவைகள் வியர்த்தமாவதுடன் துயரத் தொடர்புக்குக்காரணமாகின்றன. முதலில் மாமா சிவராமன் விஷயமாய் என்னை எச்சரிப்பதுபோல் தோன்றுகிறது— “இந்தக்கடிதம் வருகிறதை அறியாமல் இக்கடிதத்துடன் ஒரே ரயிலில் பிரயாணம் செய்து உன்னிடம் நைச்சியம் பேசவரும் ஒண்ணு நெம்பர் சகுனிமாமா” என்பது மாமா சிவராமனையல்லவா குறிப்பதாய்த் தெரிகிறது! கீழே மணி மாமாவைப்பற்றியும் எழுதியிருக்கிறது. ஸரஸுவைக் காக்கையாக வருணித்திருக்கிறார்! “மணிமாமாவை வெங்கிடசுப்பையரிடம் தள்ளிவிடு” என்று எழுதியிருப்பதால் மணி மாமாவும் இங்கு வரப் பிரசக்தியிருப்பதுபோல் தோன்றுகிறது. மொத்தத்தில் இரண்டு மாமாக்களையும் நிராகரிக்கும்படி எழுதியிருக்கிறார்! செல்லம், ஸரஸ்வதி இருவரும் என்னை அடையப்போட்டி போடுவதாய் ஏற்படுகிறது! ஆனால் செல்லத்தைப்பற்றியவரையில் இது அசம்பாவிதமாய்த்தோன்றுகிறதே! ஆனால் ஒருவேளை மாமா சிவராமன் அப்பாவிடம் பிரஸ்தாபித்துவிட்டு இங்கு என்னைப் பார்க்க வந்திருக்கிறார்போலும். மாமா சிவராமனின் சருகிய நிலைமையில் ராமனாதனைக்கைவிட்டு என்னை ஆச்ரயிக்கிறார்போலும். ஒருவேளை அவர் அக்காவும், அத்திம்பேரும் நிராகரிப்பு மூலம் அவரை உத்சாக பங்கப்படுத்தியிருக்கலாம். அடுத்தபடியாய் என்னைக்கோருகிறார்போலும்! அப்பாவுக்கு மாமா சிவராமனிடம்

வெறுப்புஇருக்காததுசகஜம். சிவராமன்—பெரியஹோதாவில் தர்பார் நடத்தும் சிவராமன்—அப்பாவிடம் போய் யாசிக்கக்கூடியவரென்று ஸ்வப்பனத்திலும் நான் நம்பமுடியாது. ஆனால் இந்த உலகத்தில் எதுதான் நடக்காது? அப்படி ஒருவேளை சிவராமன் என்னிடம் பிரஸ்தாபித்தால், அப்பா எச்சரிக்கு முன்னமேயே செல்லத்தின் விஷயத்தில் நான் என்ன தீர்மானம் சொல்வது என்பது எனக்குத் தெரியும். ராமநாதனுடன் பகைத்துக்கொள்ளும்படி நேரிடுமானால் செல்லத்தைமட்டுமல்ல, என் உயிரையே நான் தியாகம் செய்யத்தான் நினைப்பேன். ராமநாதனுக்குச் செல்லத்தினிடம் விருப்பு வெறுப்புகள் எவ்விதம் என்று வியக்தமாய்த் தெரியாவிட்டாலும் அவனுக்கென்று உத்தேசிக்கப்பட்டுப் பிரஸ்தாபங்கள் நடமாடி வந்திருப்பதால் என்பெயர் அந்தச் சம்பந்தத்தில் உச்சரிக்கப்படுவது கூட எனக்கு விஷம்போல் பயத்தைத் தருகிறது. எனக்கு ஏதோ போதாதகாலத்திற்குத்தான் இந்தப் பரிசோதனை வந்திருக்கிறதென்று நினைக்கிறேன். மேலும் செல்லம் என்னை மதிக்கிறவள் என்று தோன்றவில்லை. இந்த திடுக்கிடும் பிரஸ்தாபத்தை மாமா சிவராமன் என்னிடம் ஆரம்பித்தால் அவருக்கு என்ன பதில் சொல்வதென்பது தெரிந்தது தான். ஆனால் மணி மாமாவுக்கு என்ன தெரிவிக்கிறது? அவர் கடிதம் சுருக்கமாயும் அன்பும் நம்பிக்கையும் ததும்புவதாயிருக்கிறது. அவர் இங்கே வருவதாய் ஒன்றும் எழுதவில்லை—"இந்த வருஷம் சௌ. ஸரஸுவுக்கு விவாகத்தை ஈச்வரக்கிருபையிருந்தால் நடத்திவிடலாமென்று உத்தேசம். உனக்குப் பரீக்ஷை முடிந்து நீ ஊருக்கு வரலாமென்று எதிர்பார்க்கிறேன். உன் தேசகால வர்த்தமானங்களின் அனுகூலம் எப்படி இருக்கிறது? உன் அப்பாவிடமும்பிரஸ்தாபித்திருக்கிறேன். மேலே என்ன செய்வதென்று உன் பதிலைப் பார்த்துக்கொண்டு யோசிக்கவேண்டும்"—ஸுப்பிரமண்யஸ்வாமி மயில் வாஹனத்தில் இருப்பதுபோல் வசனம்! தாத்பரியம் ஸ்பஷ்டமாகத்தானிருக்கிறது. எனக்குப் புதுப் பழக்கங்களில் மோகமில்லை. மணி மாமாவுக்கு நான் அடிமைப் படவேண்டியவன். ஸரஸுவை அப்பா காக்கை என்று வருணித்திருக்கிறார். அவருக்கு ஹம்ஸமாய் தோன்றும் பெண்கள் எனக்கு கொக்காயும் கோழியாயும்



தோன்றலாம். அப்பா நிறத்தைப் பார்க்கிறார். நான் சுபாவத்தைப் பார்க்கிறேன். அப்படியும் ஸரஸுவைக் கறுப்பென்று சொல்வது துவேஷபுத்தியினால்தானே ஒழிய, வேறில்லை. அவன் பொன்னிறமல்ல. மாநிறம். நிறத்திற்கும், வசீகரத்திற்கும் சம்பந்தமில்லை. சுரைக்காய்போல் முகமும், கோழிபோல் விழியும், அலகுபோல் மூக்கும், அகண்ட நெற்றியும், கோணல், வாயும் கொக்குக் கழுத்துமாக விருந்தால் நிறம் என்னசெய்யும்? ஆனால் அப்பாவை அனுசரித்துத்தான் மாமாவுக்குப் பதில் எழுத வேணும். தெய்வசங்கல்பம் அப்பாவுக்கும் கட்டுப்பட்டதல்ல. என்னையும் எதிர்பார்ப்பதல்ல. நம் சாமர்த்தியத்தில் ஒன்றுமில்லை. நீதிவழியே நாம் நடந்தால் அது எங்குபோய் விட்டாலும் சம்மதமே. "விவாஹத்தைப் பற்றி நன் இப்போது சிந்திக்கவில்லை. என் நிலைமை நேர்ப்பட்ட பிறகு அதாவது நான் ஒரு நிர்வாகியான பிறகு, அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய அவகாசமிருக்கும். ஒரு விதத்திலும் சுதந்திரமில்லாத நான் களத்திரமுடையவனாக எப்படிச் சம்மதிக்க முடியும்? தாங்களே பரிசீலனை செய்து பார்த்து என்னை க்ஷமிக்கவேண்டும்"—என்று மணி மாமாவுக்கு எழுதி விடுகிறேன்.

ஸரஸுவுக்கு என்ன பதில் எழுதுகிறது? ஒரே தபாலில் இந்தமூன்று லெட்டர்களும் வரக்காரணம் என்ன? ஸரஸுவின் கடிதம் அவளுடைய கவலையை வெளிப்படுத்துகிறது. ருக்மிணி, கிருஷ்ண பகவானுக்குத் தூது அனுப்பும் நெருக்கடிபோல் ஏதோ ஒரு நெருக்கடியை அவள் சந்தேகித்தாலொழிய இக்கடிதம் எழுத நினைத்திருக்கமாட்டாள் என்பது நிச்சயம். சியாமளாம்பாபுரத்தில் ஏதோ பேச்சு வார்த்தைகள் பலமாய் நடந்துவருவதாய்த் தெரிகிறது. ஸரஸு அரண்டு கொள்ளும்படி என்ன நடவடிக்கைகள் நடந்திருக்கின்றனவோ! ஊகிப்பது அசாத்தியம். ஆனால் இந்தக்கடிதம் எழுதக்கூடிய பண்புபெற்ற கன்யா ரத்னத்தை நிராகரிப்பது எப்படி முடியும்? வாழ்க்கையில் இந்தப் பண்பு இணையற்ற மகிழ்ச்சிக்கும்' அபிவிருத்திக்கும் உத்தரவாதியல்லவா? கடிதமும் ஒரு புதிர்போட்டால்போல் தானிருக்கிறது.—"ஸ்ரீமான் அத்தான் அவர்களுக்குத் தங்கள் அன்புள்ள மருமாள் ஸரஸ்வதி அநேககோடி நமஸ்காரம். நேற்று இரவு நான் தூக்கத்தில் விழித்துக்கொண்டு காதால் கேட்டது ஸ்வப்னமா, வாஸ்தவமாவென்று பிரமித்துவிட்டேன். நான் தூங்குவதாகவே என்

பெற்றோர்கள் எண்ணியிருந்திருப்பார்கள். உங்களுக்குப் பலவிதமாகக் கடிதங்கள் வரும். பல தாட்சண்யங்கள் ஏற்படலாம். எனக்கு எல்லோரையும்போல் எழுதத்தெரியாது. நான் காதம்பரியைப்போல் வாசகம் என்ன எழுதுவது என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் நைஷதகவியைச் சரணமடைகிறேன்.

ஶ்ரீ

मनस्तु यंनोज्झति जातु यातु
मनोरथः कण्ठपथं कथं सः ।
का नाम बालाद्विजराज पाणि
ग्रहाभिलाषं कथयेदभिज्ञा ॥

மநஸ்து யம் நோஜ்ஜதி ஜாது
யாது
மநோரத: கண்டபதம்
கதம் ஸ: |
கா நாம பாலா த்விஜ ராஜ
பாணி
க்ரஹாபிலாஷம் கத யேத
பிக்ஞா ||

मदन्य दानं प्रति कल्पनाया
वेदस्त्वदीये हृदि तावदेषा ।
निशोऽपि सोमेतर कान्तशंका-
मोंकार मग्रे सरमस्य कुर्याः ॥

மதன்ய தானம் ப்ரதி கல்ப
னயா
வேதஸ்த்வதீயே ஹ்ருதி
தாவதேஷா |
நிசோऽபி ஸோமேதர காந்த
சங்கா
மோங்கார மக்ரேஸர மஸ்ய
குர்யா: ||

अलं विलम्ब्य त्वरितुं हि वेला
कार्ये किल स्थैर्यसहे विचारः ।
गुरूपदेशं प्रतिभेव तीक्ष्णा
प्रतीक्षते जातु न कालमार्तिः ॥



இதாலியில் நடந்த மோட்டார் போட்டியில் 16 குதிரை வேகமுள்ள இந்தக் கார் ஜெயித்தது. இது பிரிட்டிஷ் கார். இப் பந்தயத்தில் பிரிட்டிஷ் கார் ஜெயிப்பது இதுவே முதற்தடவை. 90 நிமிஷத்தில் இது போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுவிட்டது.

அலம்விலம்ப்ய த்வரிதும் ஹி
வேளா
கார்யேகிலஸ்தைர்ய ஸஹே
விசார: |
குருபதேசம் ப்ரதிபேவ
தீக்ஷ்ணு
ப்ரதீக்ஷதே ஜாது ந
காலமார்த்தி : ||

நீங்கள் அப்பாவிடம் நைஷதம் படிக்கும்போது நான் பக்கத்திலிருந்து கவனித்துக்கொண்டிருந்தேன். பின்பு அப்பாவிடம் நானே நைஷதம் வாசித்தேன். காவ்யம் தனிச்சிந்தனையில் மட்டுமல்லாமல் உலகவியலிலும் உயர்ந்த பயன் தருமென்பதை இப்போது உணர்கின்றேன்.

இப்படிக்குத் தங்கள்
அன்புள்ள மருமாள்
ஸரஸ்வதி.

ஸீதாராமன் பலமுறை இந்த சுலோகங்களை ஆவிர்த்தி பண்ணித் தாத்பரியத்தை ஆராய்ந்து பார்த்தான். ஸரஸுவுக்கு அவளைப்போலவே அவ்வளவு நாசூக்காக எப்படி பதில் எழுதுவது என்ற சிந்தையில் ஆழ்ந்து கரை காணுமல் அவன் தூக்கத்தில் அமர்ந்து விட்டான்.

ஸீதாராமன் தூக்கம் விட்டெழுந்ததும், விடியற்காலையில் மாமாவுக்கு உத்தேசித்தபடி கடிதத்தை எழுதிவைத்தான். தகப்பஞருக்கு உடனே பதில் எழுதவில்லை. மாமா சிவராமன் ஊருக்குத்திரும்பிய பிறகு எழுதலாம் என்று ஒத்திப்போட்டான்.

அடியில் குறிப்பு

இந்த சுலோகங்கள் நைஷதம்

3-வது ஸர்க்கம் 59, 75, 91 லக்கமிட்டவை.

இவைகளின் சுருக்கமான தாத்பரியம் பின்வருமாறு:—

"பாணிக்ரஹண விஷயத்தில் தன் மனதிலிருக்கும் அபிலாஷையை எந்தக் கன்னிகை வார்த்தைகளிஞல் நேராகச் சொல்லுவாள்?"

"என்னை வேறு மணுளனுக்குக் கொடுப்பது சம்பாவிதம் என்று நினைக்குமுன் இரவில் சந்திரனைத்தவிர மற்ருெருவன் பிரகாசிக்கலாம் என்பதைச் சித்தாந்தப்படுத்திக் கொள்ளவும்."

"துரிதமாய்ச் செய்ய அவசிய மேற்பட்ட காலத்தில் தாமதம் சரியல்ல. ஆலோசனைகளெல்லாம் அதற்கு அவகாசம் தரும் கார்யத்திற்குத்தான். வேதனை விளம்பத்தைச் சகியாது."

ஸரஸுவின் கடிதத்தை மறுபடி எடுத்து வாசித்தான். அவன் தன் பெற்ருேர்களின் பேச்சுவார்த்தைகளைக் கவனித்ததிலிருந்து அப்பாவுடன் சமரஸம் முறிந்துபோய் வேறு வரனுக்கு நிச்சயம் செய்துவிட அவர்கள் உத்தேசித்திருப்பதை அவள் அறிந்து அதைத் தனக்கு எச்சரிக்கை செய்யவே அக்கடிதம் எழுதலாஞள் என்று ஊகித்தான். அவளுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்ற கவலையில் ஆழ்ந்தான். கடிதம் போடுவது யுக்தமல்ல என்று தீர்மானித்தான். அவன் தகப்பஞருக்கு ஒரு மாதிரியாயும் அவளுக்கு ஒரு மாதிரியாயும் எப்படிக் கடிதம் எழுதுவது? கடிதம் மாமா கைக்குக்கிடைத்து விட்டால் என்ன செய்கிறது? அவளும் பதில் போடும்படி எழுதவில்லை. விபரீதப்போக்கில்லாமல் பார்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்திருக்கிருள். அவ்வளவுதான் மணிமாமா தடபுடலாய் ஒன்றும் செய்துவிடமாட்டார்.

எனக்கு முன்னறிக்கையில்லாமல் நிச்சயமாய் ஒன்றும் நடந்துவிடாது. எதையாவது சாக்கு வைத்துக்கொண்டு, அவர் இங்கு வருவார் என்று நான் எதிர் பார்க்கிறேன். ஆஞல் ஸரஸுவுக்குச் சமாதானம் சொல்ல வேறு உபாயம் ஏதாவது உண்டா ?

ஸீதாராமனின் ஆலோசனை முடியுமுன் பொழுது விடிந்தது.

(இரண்டாம்பாகம் முற்றிற்று.)

(தொடரும்.)

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

இதுவரையில் . . .

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கிரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய்ச் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை: ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிருன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபைகூட்டி மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணு சித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

12

முற்றுப்பெருத காலட்சேபம்

திருக்கோஷ்டியூரில் செல்வநம்பி ஹரிகதா காலட்சேபம் செய்துகொண்டிருக்கிருர். இடையிடையே பௌத்தபிட்சு ஆனந்த தீர்த்தர் அவ்வூருக்கு வந்து பகிரங்கமாக அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்வதாகவும், இரகசியமாகப் பொதுஜனங்களைப் பக்திமார்க்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் விரோதமாய்த் திருப்பிவிடுவதாகவும் தெரிந்துகொண்டிருந்தார் செல்வநம்பி. மந்திரி மாறங்காரி மூலமாகவும், அவருடைய அந்தரங்க ஒற்றனுன நரசிம்மன் மூலமாகவும், பாண்டி நாடெங்குமே ஜனங்களுக்கிடையே தவருன கிளர்ச்சிகளைப் பௌத்தபிட்சு வளர்த்து வருகிருர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்திருந்தன. தமது சொந்த ஊரில் நடந்த பிரசாரங்களைக் குறித்தும் அவற்றின் விளைவுகளைக் குறித்தும் செல்வநம்பிக்கு ஓரளவு நேரடியான சான்றுகளும் கிடைத்திருந்தன. செல்வநம்பியின் மனைவி ஸௌம்யவல்லிக்கு நம்பியைக் காட்டிலும், பிட்சுவைக் குறித்து அதிக அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

'ஜனங்கள் வரவர ராஜதூஷணையிலும், தேவதூஷணையிலும் ஈடுபடுகிருர்களே; நாஸ்திகம் நாளுக்கு நாள் பரவி வருகிறதே; இந்த நிலைமையைச் சீர்திருத்துவதற்கு ஏதாவது செய்யவேண்டாமா?' என்று கேட்டாள் ஸௌம்யவல்லி கணவரை நோக்கி.

ஊர்க்கவலையெல்லாம் நமது தலைமேல் போட்டுக்கொள்வானேன்? மற்றவர்கள் தவருன வழியில் செல்லத்துணிந்தால் அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? அவர்களுடைய அறிவு திருந்தும்படி பகவானைப்பிரார்த்திக்க வேண்டியதுதான். நீயும் ஸௌம்யநாராயண மூர்த்தியைப் பிரார்த்தனை செய்துகொள். திருமாமகள்—நாச்சியாரையும் பிரார்த்தித்துக்கொள். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், கூத்தாடியும் காட்சியளிக்கும் நமது பகவானுடைய திருக்கோலங்களை நானும் மன்றுடிப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். சிங்கப்பிரானையும் பிரார்த்தித்துக் கொள்கிறேன். உடையவன் உடையைக் கைவிடுவானு?' என்று பதில் சொன்னுர் செல்வநம்பி.

அதற்கு ஸௌம்யவல்லி, 'பிரார்த்தனை செய்துகொள்வதோடு தங்கள் வேலை முடிந்து விட்டதென்று நினைக்கிறீர்களா? பிரார்த்தனையோடு பிரசாரமும் செய்து மக்களைத் திருத்த வேண்டாமா?' என்று மறுபடியும் கேட்டாள்.

'நான் செய்யக்கூடிய—எனக்குப்பிடித்த பிரசாரம் எல்லாம் ஹரிகதா காலட்சேபம்தான். மனமுருகிச் செய்யும் கதாகாலட்சேபங்களைப் போல் எந்தப்பிரசாரம்தான் மனோபாவத்தை வசீகரித்து வாழ்க்கையைத் திருத்தமுடியும்?' என்றார் செல்வநம்பி.

'எதிரி எவ்வளவோ தந்திரமாகவும், தர்க்க ரீதியாகவும் தொடர்ந்து பிரசாரம் செய்து மக்களை நீண்ட நாளாகக் கெடுத்து வந்திருக்கும் போது, தாங்கள் பகவத்கீதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? "பக்திமதம் புராணமதம்தான்; பௌத்தமதமே விவேகிகளின் மதம்" என்று பௌத்தபிட்சுதான் சொல்லிவருகிறாரே!' என்றாள் ஸௌம்யவல்லி.

'அந்த விவகாரங்களெல்லாம் மகாராஜா சீக்கிரமாய் நடத்தப்போகிற வித்வத் சபையில் அடிபட்டுப்போகும்! விஷ்ணுசித்தர், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பயணமாகி மதுரைக்குப் போய் விட்டார். அவர் மூலமாகவே பகவானின் சித்தம் தன்னை வெளியிட்டுக்கொண்டு வெற்றியடையப்போகிறது. அதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது. அவரை எந்த மதவாதியும் தர்க்கவாதியும் ஜயிக்கமுடியாது. அவர் வாய்திறந்து உண்மையைச் சொன்னாலே போதும்; வாதம் செய்ய வந்தவர்கள் அப்படியே தோல்வியை ஒப்புக்கொண்டு காலில் விழுந்து விடுவார்கள். அவருடைய நந்தவனத்திற்கே மதவாதிகள், நாஸ்திகர்கள் வந்து போவதுண்டு வரும்போதுதான் வாதங்களெல்லாம்; விரைவில் சரணாகதி செய்துவிடுவார்கள்; திரும்பிப் போகும்போது விஷ்ணுவின் புகழையும், விஷ்ணுசித்தரின் புகழையும் பாடிக்கொண்டு போவார்கள். நீயும் வித்வத்சபையில் பெண்களுக்கென்று அமைக்கப்பட்டிருக்கும் பகுதியில் அமர்ந்து பார்க்கப்போகிறாயே' என்றார் செல்வநம்பி.

பிறகு, 'நாம் இருவரும் மதுரைக்குப் புறப்படுவதற்குள் ஒரு கதாகாலட்சேபம் நடத்தப் போகிறேன். பலனைப்பற்றி நமக்கென்ன கவலை?' என்றார் செல்வநம்பி மனைவியை நோக்கி. அப்படிச் சொல்லிவிட்டுத் தம்முடைய சீடர்களை வரவழைத்து அந்தக் காலட்சேபத்தைக் குறித்து ஊரெங்கும் அறிவிக்கும்படி கட்டளையிட்டார்.

'ஸ்ரீய: பதியாய், அனந்த கல்யாணகுண பரிபூர்ணனாய், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலனாய், சர்வேச்வரனாய்.......' என்று சாதாரண காலட்சேபம் போலத்தான் ஆரம்பமாயிற்று. செல்வநம்பியின் காலட்சேபம் நடந்து சில மாதங்களாகிவிட்டதால், திருக்கோஷ்டியூரில் உள்ளவர்களும், பக்கத்து ஊரிலுள்ளவர்களும் திரண்டு வந்து ஒரு பெருங்கூட்டமாகக் கோவில் வாசலில் கூடியிருந்தார்கள்.

செல்வநம்பி பொதுவாகப் பகவானுடைய கருணையைக் குறித்தும், அவதார மகிமைகளைக் குறித்தும் சிறிது பேசிவிட்டு, அந்தக் கோயில்—பிராகாரத்தில் வடபுறம் இரணியனை ஓடிப் பிடிப்பதுபோலவும், வதஞ்செய்வது போலவும் உள்ள சிங்கப்பிரானின் இரண்டு உருவங்களின் உட்பொருளையும் விளக்கினார்.

மற்ற அவதாரங்களின் வைபவத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தைக் குறித்து விரிவாகப் பேசினார். ஸ்ரீ கிருஷ்ண லீலைகளின் உட்பொருளை நன்கு விவரித்தார். கண்ணன் இளமையிலேயே செய்யத்தொடங்கிய அசுரவதங்களும் அவனுடைய அருளுக்கே சான்றாகும் என்றார்.

தன் மகனுடைய சரீரத்தில் இரத்தக்கட்டி வந்துவிட்டால் 'அதை அறுத்துத் தள்ளுவது சரியா?' என்று எந்தத் தந்தைதான் எண்ணிக் கொண்டிருப்பான்? வைத்தியரை அழைத்து ரணசிகிச்சை செய்து மகனுடைய உயிரைக் காப்பாற்றத் தயங்குவானா?—தாமதிப்பானா? நோயாளி மூடனாக இருந்தால் ரண வைத்தியனைக் கோபித்துக்கொள்வான்; அவனுடன் பகைமை கொள்வான். நோயாளி பைத்தியக் காரனாக இருந்தால் ரணவைத்தியனை அடித்துத் துரத்தவும், கொலை செய்யவும் பின்வாங்கமாட்டான். ஆனால் தந்தையுள்ளமும், தாயுள்ளமும் 'போனால் போகிறது; இரத்தக்கட்டியுடன் மகன் இன்னும் அதிகத் துன்பத்தை அனுபவித்துக்கொண்டே தொலைந்து போகட்டும்!' என்று ரணவைத்தியனை வந்தவழியே திரும்பிப் போகும்படி அனுப்பிவைக்க முடியுமா? பகவானே தந்தையாகவும், தாயாகவும், வைத்தியனாகவும் விளங்கி, நமக்கு ஆரோக்கியமும் நீண்ட மகிழ்ச்சியும் தருவதற்காக அவசியமானால் ரண சிகிச்சையும் செய்யப் பின்வாங்கமாட்டான். 'இதுதான் கண்ணபிரான் செய்தருளிய துஷ்ட நிக்கிரகத்தின் இரகசியமான தத்துவம்' என்றார் செல்வநம்பி.

'கண்ணனுடைய துஷ்ட நிக்கிரக லீலைகளும் சிஷ்ட பரிபாலன லீலைகள்போல் உலக க்ஷேமத்திற்கு எவ்வளவு அவசியமானவை' என்று தெளிந்து அந்த லீலைகளை வியந்தார்கள் காலட்சேபம் கேட்டுக்கொண்டிருந்தவர்களெல்லாம்.

பிறகு துஷ்டர்களைச் சுமப்பது பூமிதேவிக்கு இரும்பு மூட்டைபோல் மிகவும் கனமாக இருக்குமென்றும், நல்லவர்கள் கோடிக்கணக்காகப் பெருகிவிட்டாலும் அவர்களைச் சுமப்பதும் இலவம் பஞ்சைத் தாங்குவது போல் பூமிதேவிக்கு அவ்வளவு லேசாக இருக்குமென்றும் சொன்னர். 'ஆகையால் நாம்நம்மைப் பூமிக்குப் பாரமாகச் செய்துகொள்ளக் கூடாது' என்ற உணர்ச்சி காலட்சேபம் கேட்டவர்களுக்கெல்லாம் ஏற்பட்டது.

தாம் வெளியிட்ட கருத்துக்களைக் கதா ரூபமாக விளக்கிவிட்டுச் செல்வநம்பி,

ஜகதீசர் தேவரீரே—ஜயமுகுந்தரே !

என்று பாடத்தொடங்கினர். அவருடைய கள்ளங்கபடற்ற குரலில் அந்தக் கண்ணிகளைப் பாடியதும், கேட்டவர்களெல்லாம் பரவசமானர்கள்.

மேவுபயத்தால் வாடினேமே—ஜயமுகுந்தரே !
வேண்டியடைந்தோம் வாசுதேவ—ஜயமுகுந்தரே!

என்று செல்வநம்பி மனமுருகிப் பாடியதும், அந்த இசை ஒவ்வொரு இதயத்திலும் வீணகானம்போல் ஒலிக்கத் தொடங்கியது.

மறுபடியும் கதாப்பிரசங்கம் ஆரம்பமாயிற்று. தன் சின்னஞ்சிறு காலை நிமிர்த்து, வண்டிவடிவமாக வந்திருந்த சகடாசுரனை வீழ்த்திய லீலையையும், இரட்டை மருதமரம் முறியத்தவழ்ந்து சாபத்தால் மரமாய்க் கிடந்தவர்களை விடுவித்து வாழ்த்திய லீலையையும் பிரசங்கித்தார். பிரசங்கித்துவிட்டு,

பல்லவி

உனக்கு நமஸ்காரம்—பாலகிருஷ்ண !
உனக்கு நமஸ்காரம்

அனுபல்லவி

நமஸ்காரம்—ஹரி !
அனந்த பலமுள்ள—உனக்கு நமஸ்காரம்

சரணம்

நாட்டும் ஜீவனையெல்லாம்
ஆட்டிவைக்கும் பாலனே !—உனக்கு
நமஸ்காரம்
பார்க்கும் ப்ரபஞ்சத்தை உண்—
டார்க்கி அழித்தழிக்கும்—உனக்கு நமஸ்காரம்
வேதமழலை கொஞ்சும்
நாதக்குழந்தையான—உனக்கு நமஸ்காரம்

என்று பாடினர்.

பிறகு குழந்தைக் கண்ணன் வாயில் ஆய்ச்சி உலகம் ஏழும் கண்ட அதிசயத்தைப் பிரசங்கித்துவிட்டு, ஜகன்மோகன வேணுகோபாலன் பசுக்களையும், கன்றுகளையும், ஆய்ச்சிமார்களின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்த அதிசய லீலைகளைப் பிரஸ்தாபித்தார். பிரஸ்தாபித்துவிட்டு,

அனந்தனைக் கண்டார்—ஆய்ச்சியர்
ஆனந்தங் கொண்டார்

என்று பாடத்தொடங்கினர்.

அந்தப் பாடல் முடிந்ததும், 'கண்ணன்' ஒரு நாள் கன்றுகளை ஓட்டிக்கொண்டு அதற்குமுன்

ஒருவரும் சஞ்சரிக்கத் துணியாத ஒரு வழியிலே போகத்தொடங்கினன்' என்று ஒரு கிருஷ்ண லீலையைப் பிரஸ்தாபிக்க ஆரம்பித்தார்.

மற்ற ஆயப்பிள்ளைகள் வழக்கம்போல் கண்ணனுடன் உத்ஸாகமாய் ஓடிவராமல் பின்தங்கினர்கள். கண்ணனே, வாருங்களடா குள்ளன், நெட்டையன், கறுப்பன், சிவப்பன், வெள்ளையன்!—எல்லாரும் வாருங்கள்' என்று கூவி அழைத்தான். அந்தப் பிள்ளைகளில் எல்லாருக்கும் மூத்தவனை கறுப்பன் 'கண்ணு! அந்த வழியில் போகவேண்டாம்' என்று எதிர்க் கூச்சலிட்டான்.

'ஏன்?' என்று கேட்டுக்கொண்டே கண்ணன் போய்க்கொண்டிருந்தான். ஆயப்பிள்ளைகளோ பதறிக்கொண்டே, 'வந்துவிடு கண்ணு! அங்கே உனக்கு என்ன வேலை? வந்துவிடு, வந்துவிடு' என்று கதறினர்கள். 'என வேலை அங்கும் இருக்கிறது; அங்கே இரும்பு மூட்டையை இல வம் பஞ்சாக்கப் போகிறேன்' என்று சொல்லிக் கொணடே கண்ணன் நடந்தான்.

கறுப்பன் ஓடிப்போய்க் கண்ணனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு காதில் அங்கே அந்த யமுனு நதிப் பகுதியில் ஒரு மடு இருக்கிறது என்று நடுங்கிக்கொண்டே சொன்னன்.

'அங்கேதான் போகிறேனப்பா! விடுடா, வெய்யிலாக இருக்கிறது. நான் அந்த மடுவில் தான் ஸ்நானம் செய்யப்போகிறேன். நீயும் வருவதானல் வா' என்ருன் கண்ணன்.

'வேண்டாமப்பா! அந்த மடுவிலே ஒரு விஷப் பாம்பு, ஒரு பெரிய விஷப்பாம்பு!' என்ருன் கறுப்பன்.

'தண்ணீர்ப்பாம்பு என்னடா செய்யும்?' என்று கண்ணன் சொல்லித் திமிறிக்கொண்டு போய்விட்டான். பீதாம்பரமும் மயில் தோகையுமாகக் கண்ணன் ஆடி அசைந்து அந்த அபாயகரமான மடுவை நோக்கிப் போவது கண்ட சில ஆயப்பிள்ளைகள் அவனைப் பிரிந்து ஊருக்குப் போக மனமில்லாமல் பின்னே சிறிது தூரத்தில் தொடர்ந்து போனர்கள்.

இக்கதையைச் செல்வநம்பி சொல்லிவரும் போது அந்தப் பழைய கதையில் புதிய புதிய பொருள்கள் வெளிப்படுவதுபோலத் தோன்றியது கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு.

மடுக்கரையிலிருந்த ஒரு கடம்ப மரத்தின் மேல் ஏறிக் கண்ணன் காளியன் என்ற ஐந்தலை நாகத்தின் விஷாக்கினியால் கொதித்துக்கொண்டிருந்த அம்மடுவில் குதிப்பதையும், அந்தக் காளியசர்ப்பம் படத்தில் கண்ணனை அடிப்பதையும் கண்முன் நடப்பதுபோல் செல்வநம்பி வருணித்ததும், அக்காட்சியைச் சிறிது தூரத்திலிருந்து கவனித்த கறுப்பன் முதலான கோகுல பாலர்களைப்போல், அச்சபை முழுவதும் "ஐயோ, வந்துவிட்டமே ஆபத்து!' என்று வருந்திக் கதறியது.

கதறல்களுக்கெல்லாம் மேலாக ஓர் அலறல் எழுந்தது சபையிலே. 'ஐயோ காளியன்!' என்று அலறிய அந்தக் குரலைக் கேட்டதும், 'என்ன கிருஷ்ணபக்தி!' என்று ஜனங்கள் அதிசயித்தார்கள். அதேசமயம் அந்தக்கொடிய நாகத்தின் பயங்கரமான ஐந்துபடங்களையும் செல்வநம்பி வருணித்து, 'அதோ பாருங்கள், கண்ணன் அந்தப்பாம்பினிடம் அகப்பட்டுக்கொண்டான? அல்லது அந்தப் பாம்புதான் கண்ணனிடம் அகப்பட்டுக்கொண்டதா?' என்று கேட்டார் சபையை நோக்கி.

அப்போது மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாக வருந்திக்கொண்டிருந்தவர், 'ஐயா! நான்தான் அந்தப் பாம்பிடம் அகப்பட்டுக்கொண்டேனு? அகப்பட்டுக்கொள்ளமாட்டேன், ஓடிப்போய் விடுவேன்!' என்று அலறிக்கொண்டே சபையிலிருந்து கிளம்பி ஓடினர். எல்லோரும் அதிசயமாக அவரை நோக்கினர்கள். சிலர், 'ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பட்டாசாரிய ஸ்வாமியல்லவா?' என்ருர்கள்.

ஆம், அவர் நமது ஞானப்பிரான்தான். அவரைத் திருக்கோஷ்டியூரும் அறிந்திருந்தது. எனினும் சபையோர் காலட்சேபத்தில் ஈடுபட்டிருந்ததால் நடுவிலே அங்கு வந்து சேர்ந்த அவரைக் கவனிக்கவில்லை. செல்வநம்பி ஞானப்பிரானை நன்ருக அறிவார். அவரும் இதுவரை கவனித்துப் பார்க்கவில்லை; இப்போது அதிசயமாய்க் கவனித்தார்.

இப்போது அவர் எழுந்து ஓடத் தொடங்கியதும், சபையிலிருந்து சிலர் அவரைத் தொடர்ந்தார்கள். அவர்கள் தொடர்ந்துவருவதைக் கண்டதும் அவர் வேகமாய் ஓடலானர். பெண்கள் அமர்ந்து காலட்சேபம் கேட்டுக்கொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு ஸ்திரீயும் ஞானப்பிரானைத் தொடர்ந்துபோனுள்.

அந்த அம்மாள் மற்றவர்களை நோக்கி, 'அவரைத் தொடர்ந்து போகவேண்டாம்; தயவு செய்து அவரை விட்டுவிடுங்கள்' என்று வேண்டிக்கொண்டாள். அதுகேட்டுச் சிலர் திரும்பிச் சபைக்கு வந்துவிட்டார்கள். எனினும் சில இளைஞர்கள் 'அவரை எப்படியாவது துரத்திப் பிடித்து விடுவோம்' என்ற எண்ணத்துடன் ஓடினர்கள். அவர்களை நோக்கி அந்த ஸ்திரீ, 'அவருக்குச் சமீபத்தில் புத்திக்குச்சுவாதீன

மில்லை. அரைக்கால்—பைத்தியம் போலத்தான்; நீங்கள் முழுப்பைத்தியமாக அடித்துவிடாதீர்கள் என்று அழுது வேண்டிக்கொண்டாள். இவள் தான் ஹரிலட்சுமி, ஞானப்பிரானின் மனைவி.

இந்தத் தம்பதிகளை நாம் இந்தக்காலட்சேபத்தில், தேவ பூஜைவேளையில் இரு கரடிகளைக் கண்டவர்போல் சந்திப்பதற்குக் காரணம் என்ன? காளிய நடனப்படத்தை விஷ்ணு சித்தரின் பஜனைக்கூடத்திலிருந்து அபகரிக்க முயன்ற இரவிலே, ஹரிலட்சுமி சிறிதும் உறக்கமில்லாமல், ஞானப்பிரான் வீட்டுக்கு வந்துவிடுவார், வந்துவிடுவார்' என்று எதிர்பார்த்திருந்தாளல்லவா?'

அடிக்கடி மேல் மாடத்தின் முன்புற வெளியிலிருந்து பார்ப்பாள்; பின்புற வெளியில் நின்றும் பார்ப்பாள். அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் ஒற்றனை நரசிம்மனைக் கண்டாள். தன் வீட்டுக்குப் பின்புறமாக வந்து பார்த்ததும் அவன்தான் என்று சிரமமில்லாமலே ஊகித்துக்கொண்டாள்.

ஆனால் நரசிம்மன் தன்னையும் தன் புருஷனையும் சந்தேகித்துத்தான் அப்படி அன்றிரவில் தங்கள் வீட்டை முற்றுகையிடுவதுபோல் சுற்றி வருகிறான் என்று எண்ணினாள். அவன் 'பசுத் தோல் போர்த்த புலி'யைத் தேடுவதாகச் சொல்லியும் தன் கணவரைக் குறிப்பிடுவதாகவே அவள் நினைத்துவிட்டாள். பௌத்தபிட்சு தன் வீட்டில் பதுங்கிக்கொண்டிருந்தது அவளுக்கே தெரியாதல்லவா? அந்த இரவில் அவரைத்தான் நரசிம்மன் சந்தேகித்து நிழல்போல் தொடர்ந்து வந்தான் என்பதை அவளால் அந்த மனநிலையில் ஊகித்துக்கொள்ளவும் முடியவில்லை.

பொழுது விடிவதற்கு ஒரு நாழிகை இருக்கும் போதுதான் ஞானப்பிரான் வீடு வந்து சேர்ந்தார். அவருக்கு அச்சமயத்திலும் பயம் தீர்ந்தபாடில்லை. பின்னே பின்னே நோக்கியவண்ணம் விரைந்து வந்தார். மேல் மாடத்தின் முன்புறத்திலிருந்து அந்த வருகையைக் கவனித்த ஹரிலட்சுமி பளிச்சென்று இறங்கிப்போய்க் கதவைத் திறந்தாள். 'பாம்பு. பாம்பு' என்று சொல்லிக்கொண்டே அவர் உள்ளே வந்ததும்

அவள் 'வெளியே வேறு யாரும் இல்லையே?' என்று பார்த்து 'இல்லை' என்று தெரிந்துகொண்டு கதவைத்தாளிட்டாள். இரட்டைத் தாளையும் ஜாக்கிரதையாகப் போட்டிருக்கிறோம் என்று தெரிந்துகொண்டு மாடிப்படியில் ஏறினாள்.

ஆனால் 'அதோ பாம்பு மூச்சு விடுகிறதே!' என்று ஞானப்பிரான் அலறியதும், ஹரிலட்சுமி மறுபடியும் கீழே இறங்கிவந்து 'என்னபிராந்தி! வாரும்' என்று கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு போக முயன்றாள். அப்போது ஏதோ ஒரு பிராணி மூச்சு விடுவதுபோல அவளுக்கும் தோன்றியது.

'அதோ அந்த அறையில் ஐந்தலை நாகம்!' என்று ஞானப்பிரான், மூச்சுவந்த இடத்தை நடுங்கும் விரல்களால் சுட்டிக் காட்டினார். ஆம், ஏதோ ஒரு பிராணி புரண்டு மூச்சு விடுவதுபோல் அவளுக்கும் தோன்றியது. ஒரு கணம் திடுக்கிட்டவளாய், 'கதவைத்திறந்துகொண்டு வெளியே ஓடிப்போகலாமா, அவரையும் இழுத்துக்கொண்டு?' என்று எண்ணினாள். அடுத்த கணம் அப்படியே அவரையும் இழுத்துக்கொண்டு மேல்மாடத்தில் ஏறிப்போய்விடலாமா?' என்று எண்ணினாள்.

மறுபடியும் ஒரு பெருமூச்சு. ஞானப்பிரான் மாடிப்படிகளில் இரண்டு மூன்று படிகளை ஒரே தாவாய்த் தாவிக்கொண்டு உயரப் போய்விட்டார், "காளியன், காளியன்" என்று கதறிக்கொண்டே. அதற்குள் ஹரிலட்சுமியோ நிதானமடைந்து, புராண காளியன்தன் வீட்டறையில் இருக்கமுடியாதென்று தெரிந்து, 'அது மனிதனுடைய மூச்சுத்தான்' என்று தீர்மானித்துவிட்டாள்.

'மனிதன்' என்று தெரிந்ததும் 'திருடனாயிருக்கலாமோ?' என்று ஒரு சந்தேகம். ஆனால் திருடன் இப்படிப்புரண்டு மூச்சு விடுவானேன்?' 'யாரோ வருத்தப்படுவதுபோல் இருக்கிறது; அந்த ஆசாமி பிறரை வருத்தக்கூடிய நிலையில் இல்லை' என்று தீர்மானித்துக் கை விளக்கை ஏற்றிக்கொண்டு வந்தாள்.

பௌத்தபிட்சுதான் அப்படி அரைத் தூக்கத்தில் புரண்டு பெருமூச்சு விடுவதாய்க் கண்டுகொண்டாள். வெளிச்சம் கண்டதும், 'சிங்கன் சிங்கன்' என்று புலம்பிக்கொண்டு அவர் எழுந்து நின்றார். அந்த அரைத் தூக்கத்தில் ஒரு கெட்ட கனுக்கண்டு வெளிச்சத்தில் விழித்துக்கொண்டதாக அவர் சொல்லிவிட்டு, 'ஞானப்பிரான் வந்துவிட்டாரா? ஒருவேளை அந்த நரசிம்மன் கையில் அகப்பட்டுக்கொண்டாரா? காளிய நாகத்தைக் காட்டிலும் கொடியசிங்கம் அது!' என்றார்.

பிறகு பிட்சுவும், ஹரிலட்சுமியும் மேல்மாடத்திற்குப் போனார்கள். ஞானப்பிரானுடைய மனநிலை இன்னும் சரியாக இல்லை என்று தெரிந்துகொண்டதும், 'இவருக்கு மனமாற்றம் ஏற்படவேண்டும்: அதற்கு இடமாற்றம் அவசியமாகும்' என்று பிட்சு அபிப்பிராயப்பட்டார்.

ஹரிலட்சுமியும் அது நல்ல ஆலோசனைதான் என்று இணங்கி, அடுத்த ஸ்தானத்திலுள்ள ஒரு பட்டாசாரியரைக் கோவில் கைங்கரியத்திற்கு ஏற்படுத்தியபின், கணவரை அழைத்துக்கொண்டு தன் பிறந்த ஊரான திருக்கோஷ்டியூருக்கு வந்து சேர்ந்தாள்.

இங்கே செல்வநம்பியின் காலட்சேபம் நடைபெறுமென்று கேள்விப்பட்டதும், இடமாற்றத்தோடு மனமாற்றத்திற்கும் வழி கிடைத்துவிட்டதென்று கணவரையும் அழைத்துக்கொண்டு காலட்சேபம் கேட்க வந்திருந்தாள். இவர்கள் வந்த சமயம், 'கண்ணன் வாயில் உலகம் கண்ட' கதை நடந்தது. அத்தகைய கதைகளும், பாட்டுக்களும் ஆறுதல் அளிக்கக்கூடும் என்று எண்ணினாள்.

அவரும் புத்தி தெளிந்தவர்போல் கேட்டுக்கொண்டிருந்தார். திடீரென்று கதையில் காளியன் வந்ததும், பழைய பயப்பிராந்தி மறுபடியும் பட்டாசாரியரைப் பற்றிக்கொண்டது.

பௌத்தபிட்சு அவ்வூரில் தலைமறைவாகத் திரிந்துகொண்டிருந்தார், செல்வநம்பியின் பக்திக்கொள்கைகளைக் கண்டித்ததோடு, பாண்டிய மன்னனின் ஆட்சியை இகழ்ந்தும், சேரனின் தருமப்பற்றைப் புகழ்ந்தும் இரகசியப் பிரசாரமும் செய்து கொண்டிருந்தார்.

(தொடரும்)

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

செய்யும் பசுந்துள வத்தொழில்
  மாலையும் செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும்,
  பேராத சீர் அரங்கத்(து)
அய்யன் கழற்(கு) அணியும்பரன்
  தாள்அன்றி ஆதரியா
மெய்யன் இராமா னுசன்சர -
  ணே கதி வேறெனக்கே. 13

கதிக்குப் பதறிவெங் கானமும்
  கலலும் கடலும்எல்லாம்
கொதிக்கத் தவஞ்செய் யும்கொள்கை
  அற்றேன்,கொல்லி காவலன்சொல்
பதிக்கும் கலைக்கவி பாடும்
  பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன இராமா -
  னுசன என்னைச் சோர்விலனே. 14

[பசுந்துவளம்-பச்சைத்துளசி. மறை-வேதம். பேராத-நீங்காத. சீர்-சிறப்பு. அய்யன்-மேலோன் கழற்கு-அடிகளுக்கு. பரன்-மேலோன். தாள்-அடிகள். ஆதரியா-விரும்பாத. வேறு-விசேஷித்து.]

துளசிமாலைகளை அழகாய்ச் செய்தும், வேத மாலைகளைச் செந்தமிழில் அருளால் பெய்தும், அவ்-இருவகை மாலைகளையும் ஸ்ரீரங்கநாதனின் அடிமலர்களில் அழகுபெற அணிந்தும் புகழ்பெற்ற தொண்டரடிப்பொடி ஆழ்வாருக்கு அன்றி அன்பு செய்யாத சத்திய சீலராகிய இராமானுஜரின் அடிகளே எனக்கு விசேஷ கதி.

[வெங்கானம்-கொடிய காடு. கல்-மலை. கொல்லி காவலன்-குலசேகராழ்வார். பரமன்-மேலானவர். சோர்விலன்-நீங்காதவர்.

கதி வேண்டுமென்று பதறிக் காடும் மலையும் கடலும் எல்லாம் கொதிக்கத் தவஞ் செய்யும் கொள்கையை விட்டுவிட்டேன். கலைக்கவிஞரான குலசேகராழ்வாரின் பாசுரங்களைப் பாடும் பெரியவர்களின் பாதங்களையே துதிக்கும் ராமானுஜர் என்னைவிட்டு (உள்ளத்தில்) நீங்குவதில்லை!

ராகம் : சாரங்க   தாளம் : ரூபகம்

ஆ: ஸரிஸபமபதநிஸ்—அ: ஸ்நிதபமரிக ம ரிஸ.

65—வது கர்த்தாவில் (மேசகல்யாணி) ஜன்யம்.

'ரிக ம ரிஸ' என்ற விசேஷ பிரயோகம்மட்டும் சுத்த மத்யமம் உண்டு.

(பாட்டு - 13ம்—14ம்)

; ஸா பா : பா பா | பா பா பம தப பம மா | ; பம பதநீ ஸ்ா, நி | தப பா , ம ரிரிகமரீ ||
செய்யும் பசுந் | து ள வ . . த்தொ. ழில் | . மா . லே . . யும் . | செந் . . . . . தமிழ்ந் . . ||

; பா பம நித தப பம | ரீ ரீ க மா ரி ரீ ஸா | : ஸநி ஸா பா பா ; | பத ப ப பக மா பா ; ||
. பெய்யும் . . . ம . றை . | த் தமிழ் மா . . லேயும் | . பே. ரா . த | சீ . . . ர . ரங் கத் ||

; ஸா ஸா ஸா ஸா ; | பா ஸ்ா ஸ்ா; ஸ்ா ஸ்ா | ; ஸ்ா, நி ஸ்ா க்ரி ஸ்நி | தா; ஸ்நி தநி தப பா பா ||
. தை யன் க ழுற் | க ணி யும் ப ர ன் | , தா . ளன் . . றி . | ஆ த . ரி . யா . . . ||

; பம பதநீ ஸ்ா, ரி | நிஸ் தா பா ப மா தநீ | ஸ்ா, ரி நிஸ் தா பா, ம | பம நித பா பம ரிக மரி ||
. மெ. ய்யன். இ ரா . | மா . . னு சன் . சர | ணே . க . . தி . | வே . . . றென . க்கே. . . ||

ஸ்ரி—ஸ ரீ ஸ பா பா பா | பா; பம த பமப மா | ; பம பதநீ ஸ்ா ஸ்நி | தப பா , த பமரீ கமரீ ||
. . —கதிக்குப் ப த றி | வெங்கா. ன. மு ம் | . கல் . லும். . க ட . | லு. . . மெல் . . லாம் . ||

: ஸப பம நித தப பா , த | பமரீ க மா ரி ரிஸ ஸா | , நி ஸா பா; பா பத | தப பா ; பக மா பா ; ||
. கொதிக்க . த்த . வம் . . . . | செய். . யும் . . கொள்.கை | . . யற்றேன் கொல்வி. | கா . . . வ . லன் சொல் ||

: ஸா ஸா ஸா, ஸ ஸா | ஸ்ா ஸ்ா ஸ்ா; ஸ்ா; | ஸ்ா ஸ்ா ஸ்நி க்ரி ஸ்ா; | ஸ்நி தரி ஸ்நி தநி தப பா ; ||
. ப திக் கும் க லை | க வி பா டும் | பெ ரி ய . . . வர் | பா. . . தங். க . ளே. . ||

; பம பா தா நீ ஸ்ா | ஸ்நி தநி தப பா , ம பதநீ | ஸ்ா ஸ்ரி ஸ்நி தநி தப பா , ம | பம நித பா பம ரிக மரி ||
. துதிக்கும் ப ர ம ன் | இ . . . ரா . . . . மா . . | னு ச . னென். . . ன . . . . | சோர். . . வி ல . னே. . . ||

ஸ்ரி—
. . — (செய்யும் பசுந்துளவ)

ம : இந்த அடையாளம் சுத்தமத்யமம்.



-நியாயவாதி-

மத்தியான வேளை. கோடையின் வெப்பம் தாங்கமுடியவில்லை. தாழ்வாரத்தில் கோமு அம்மாள் உட்கார்ந்துகொண்டு ஒரு விசிறியால் விசிறிக்கொண்டு இருந்தாள். அப்பொழுது வெளியிலிருந்து ஒரு வயது முதிர்ந்த விதவை உள்ளே வந்தாள். அவளைப் பார்த்ததும் கோமா "வாருங்கள்! அம்புலு பாட்டி! ஏது மாதக் கணக்காய் ஊரில் இல்லைபோல் இருக்கிறதே? எப்பொழுது வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

அம்புலுபாட்டி விசுபலகையில் உட்கார்ந்துகொண்டு'' ஆமாண்டியம்மா! ஒரு வருஷமாய் நான் ஊரில் இல்லை. பம்பாய் போயிருந்தேன். என் பெரிய பிள்ளையின் பெண் பிரஸவத்துக்கு அங்கே வந்திருந்தாள். அவள் பிரஸவித்த ஆண் குழந்தை பிறந்தபின் நான் பட்டணத்துக்கு வந்தேன். அங்கே என் பெண்ணுக்கு உடம்பு அஸௌக்கியமாய் இருந்தது. அங்கே நாலு மாதம் இருந்துவிட்டு நேற்றுதான் இந்த ஊருக்கு வந்தேன். "நீஸௌக்கியம்தானே! உன் ஆத்துக்காரர், குழந்தைகள் எல்லாம் க்ஷேமந்தானே'' என்று வினவினாள்.

கோமா "எல்லாரும் ஈசுவரனது கிருபையால் ஸௌக்கியமாய் இருக்கிறோம்'' என்றாள்.

பாட்டி "ஏண்டியம்மா! எதிர் வீட்டு எச்சுமு எப்படி இருக்கிறாள்? அவள் வீட்டில் தினம் ஒரு சபை கூடுமே, அது நடக்கிறதா?. அவள் சினேகிதி சேஷி எப்படி இருக்கிறாள்?'' என்று விசாரித்தாள்.

கோமா "பாட்டி உங்களுக்குச் சாமாசாரம் தெரியாதா, இப்பொழுது எச்சுமுக்கும் சேஷிக்கும் வெட்டுப்பகை குத்துப்பகை. எல்லாம் எச்சுமுவின் பிள்ளை ராஜாமணியின் கல்யாணத்தால் நேர்ந்த கூத்து'' என்றாள். பாட்டி வியப்புடன் "என்ன ராஜாமணிக்குக் கல்யாணம் ஆய்விட்டதா? பெண் எந்த இடம், விவரமாய்ச் சொல்லேன்?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

"பாட்டி அது ஒரு பெரிய கதை. விவரமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்ற பீடிகையுடன் கோமு பின்வருமாறு கூறலானாள்:

"எச்சுமுவின் புருஷனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கையில் காலணா இல்லாமல்தான் அவன் வாழ்க்கையை ஆரம்பித்தான். முதலில் ஒரு ஹோட்டலில் அவன் வேலை செய்தான். கையில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும், தானே ஒரு ஹோட்டல் நடத்த ஆரம்பித்தான். கச்சேரிக்கு எதிரில் அவன் நிலம் இருந்ததால் அவனுக்கு ஆரம்பத்திலேயே நல்ல வரும்படி கிடைத்தது. அவன் தாயாருக்கும் காப்பியும் பஜ்ஜியும் முதல் தரமாய் இருந்தன. அதனால் அவனுக்கு "பஜ்ஜி பாச்சா'' என்ற பெயர் வந்து விட்டது. (அவன் நாமதேயம் பார்த்தஸாரதி என்பது) பாச்சா ரொம்பவும் வினயமானநடத்தையுடையவன். சிரித்த முகத்துடன் எல்லாருடனும் பேசுவான். அவன் கிளப்பை ஆதரியாத வக்கீலோ, கட்சிக்காரனோ, பெரிய மனிதனோ, உத்தியோகஸ்தனோ யாருமில்லை. மூன்று வருடங்களுக்குள் அவன் கையில் ஐயாயிரம் ரூபாய் ரொக்கம் சேர்ந்து விட்டது.

அதன் பின் அவன் தான் நடத்திய கிளப்பை வேறொருவனிடம் கொடுத்துவிட்டு கடைத்தெருவில் ஒரு கடையை ஆரம்பித்தான். இப்பொழுது அவன் "பஜ்ஜி பாச்சா'' அல்ல. "ஷாப் ஸாரதி'' யாக மாறி விட்டான். அவன் ஷாப் ஆரம்பித்த மறு வருடமே யுத்தம் தொடங்கியது. கேட்க வேண்டுமா? அவன் வாங்கின சாமான்கள் எல்லாம் கொள்ளை லாப விலைக்கு விற்பனையாகின. மூன்று வருடங்களுக்குள் அவன் மூன்று லட்சம் ரூபாய் சம்பாதித்து விட்டான்.

கடைத்தெருவில் மூன்று பெரிய கட்டடங்கள், அக்கிரகாரத்தில் இரண்டு பெரிய மெத்தை வீடுகள். எட்டு வேலி நன்செய். இரண்டு பெரிய மாந்தோப்பு, தென்னந்தோப்பு. ரொக்கம் இருபதினாயிரம் ரூபாய்.

இத்தனை ஆஸ்திபாஸ்திகளையும் ஷாப்சாரதி வைத்துவிட்டுப் போனான். ஆமாம்! பாவம் அவற்றை அனுபவிக்க அவனுக்குக் கொடுத்துவைக்கவில்லை. ஒருநாள் ஜுரத்துடன் வீட்டில்படுத்தவன் தான். அதைவிட்டு அவன் உயிருடன் எழுந்திருக்கவில்லை.

அவன் உயிருடன் இருந்தவரையில் எச்சுமு வாசலுக்குக்கூட வரமாட்டாள். உள்ளேயே இருப்பாள். அவள் கணவன் ரொம்பவும் கண்டிப்பானவன். யாரையும் உள்ளே விடமாட்டான். எச்சுமுவையும் எங்கேயும் போகும்படி விடமாட்டான்' அவனிடம் அவளுக்கு ரொம்பவும் பயம். அவன் எதிரிலும் நிற்கமாட்டாள்.

அவன் செத்துப்போகும்பொழுது அவன் மகன் ராஜாமணிக்கு வயது பனிரெண்டு. முதல்பாரம் படித்துக்கொண்டிருந்தான். பிள்ளைக்கு மூளை இல்லை என்பது தகப்பனுக்குத் தெரியும். தான் வைத்துவிட்டுப் போகும் ஐசுவரியத்தை தனக்குப் பின் சரியாய் பரிபாலிப்பானோ

தன்மகன் என்ற கவலை அவனுக்கு இருந்தது.

இறக்குமுன் அவன் தன் மனைவி எச்சுமுவை அழைத்து பிற்காலத்து க்ஷேமம் உன் சாமர்த்தியத்தில்தான் இருக்கிறது. ராஜாமணிக்கு ஒன்றும் தெரியாது. அவனைச் சரியானபடி கவனித்துக் கொண்டுவா. பெண் சுந்தரியை நல்லஇடத்தில் கல்யாணம்செய்து கொடு'' என்று சொல்லிவிட்டு கண்ணை மூடினான்.

அகமுடையான் இறந்த பின் எச்சுமு தானே தன் மகன் மைனர் ராஜாமணிக்கும் அவன் தங்கையான சுந்தரிக்கும் "கார்டியனானாள்.'' அந்த ஹோதாவில் அவள் தனது அண்ணன் மகன் ராமுவை தனது ஏஜண்டாக நியமித்து "எஸ்டேட்'' நிர்வாகத்தை அவனிடமே விட்டுவிட்டாள்.

ராமு பலே கைகாரப் பேர்வழி. ஏற்கனவே அவன் ஒரு மடாதிபதிக்கு ஏஜண்டாக இருந்து ஐயாயிரம் ரூபாய் வரையில் விழுங்கி ஏப்பம் விட்டதாக வதந்தி. கடைசியில் அந்த வேலையை விட்டுவிட்டு அவன். தனது மாமிக்கு உதவியாக வந்து சேர்ந்தான். அத்தைக்கு சாரதி உயிருடன் இருந்தவரையில் அவனை அவன் வீட்டுக்குள் விட்டதில்லை. ஆனால்இப்பொழுதோ அவன் வைத்தது தான் சட்டம். கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றுகேட்பவர் நம்பும்படி பேசுவதில் நிபுணனான அவன் எச்சுமுவை வெகு எளிதில் தன் வசப்படுத்திக் கொண்டான். அவன் சொன்னபடி அவள் ஆட ஆரம்பித்தாள்.

பிள்ளையாண்டான் ராஜாமணியைப்பற்றித்தான் உங்களுக்குத்தெரியுமே? சுத்தஅசடு. படிப்பில் அவனுக்கு ஊக்கமில்லை. ஒரு வகுப்பில் மூன்று வருஷத்துக்குக் குறையாமல் படித்துவிட்டுத்தான் அவன் மேல் வகுப்புக்குப் போவான். இப்பொழுது அவனுக்கு வயது இருபது ஆகப் போகிறது. ஆனால் இன்னும் அவன் மெட்ரிகுலேஷன் வகுப்பை எட்டினபாடு இல்லை.

வயது வந்த வாலிபனாகயிருப்பினும் அவனுக்குப் பத்து வயது பிள்ளையின் புத்திதான் இருக்கிறது என்று என் ஆத்துக்காரர் சொல்லுகிறார். அவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்தால் அதுதான் உண்மையென்று தோன்றுகிறது. வீதியில் சிறுபிள்ளைகள் கோலி விளையாடிக்கொண்டிருந்தால் அதைப்பார்த்துக் கொண்டே அவன் நிற்பான். 'கேரம்' விளையாடுவதில் அவனுக்கு ஆசை அதிகம்., ஆனால் அவன் வீட்டில் அவ்விளையாட்டுக்கான பலகை கிடையாது. இங்கே வந்து எங்காத்துப் பையன் கிட்டுவுடன்



விளையாடுவான். ரேடியோ கேட்பதில் அவனுக்கு ஆசை அதிகம். கிட்டு ரேடியோவை திருகி விட்டால் அவன் இங்கே ஓடிவந்து விடுவான்.

கிட்டுதான் அவனுக்கு மிகவும் பிடித்த தோழன். கிட்டுவுக்கு இன்னும் பத்து பிராயம் பூர்த்தியாகவில்லை. அவனுடன் இந்த ராஜாமணி சரிசமனாய்ப் பேசுவதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்? அவனிடம்தான் அவன் தன் அந்தரங்க அபிலாஷைகளை எல்லாம் தெரிவிப்பான்.

எச்சுமுவும், ராமுவும் அவனை ரொம்பவும் அடக்கி வைத்திருந்தார்கள். எச்சுமு மிகவும் சிக்கனமானவள் என்பதுதான் பிரஸித்தமாயிற்றே. தினம் அவள் கீரைக்காரியுடன் பேரம்பண்ணுவது உங்களுக்குத் தெரியாதா? பிள்ளைக்குப் பணத்தின் அருமையைப் பற்றி அவள் போதிக்காதநாள் கிடையாது. ராமுவும் அவளுக்கு அனுசரணையாகவே இருந்தான். தான் வேண்டுவதை அவர்கள் வாங்கிக் கொடுக்கவில்லை என்பது ராஜாமணிக்குக் குறைதான்.

"நான் மேஜர் ஆனவுடன் என்ன வாங்குவேன் தெரியுமா? முதலில் ஒரு நல்ல 'காரம் 'பலகை' அப்புறம் முதல் தரமான ரேடியோ இரண்டையும் வாங்கிவிட்டேனானால் பொழுது போவதே தெரியாது' என்பான் அவன்.

கிட்டு அவனைப் பார்த்து "ஏன் இப்பொழுதே நீ வாங்கக்கூடாதா? உங்காத்தில் தான் பணம் நிறைய இருக்கிறதே'' என்று கேட்டால், அதற்கு ராஜாமணி "அம்மா கூடாது என்று சொல்லுகிறாள். அவளிடம் நான் ஒருதடவை கேரம்

பலகையும் ரேடியோவும் வாங்க வேண்டும்' என்று சொன்னேன். அவள் 'போடா பைத்தியம். எதிர் ஆத்தில்தான் இரண்டும் இருக்கின்றனவே? உனக்குக் கோலி விளையாட வேண்டும் என்று ஆசையிருந்தால் கிட்டுவுடன் விளையாடேன்.? ரேடியோதான் அவாத்தில் எப்பொழுதும் திறந்தபடி இருக்கிறதே?'' என்று சொன்னாள்' என்றான்.



ராஜாமணிக்கு எப்பொழுதும் கல்யாண கனவுதான். தனக்கு வரப்போகும் மனைவியைப்பற்றி அவன், தன்மனத்தில் சிந்திக்காத காலம் இல்லை. அடிக்கடி கிட்டுவுடம் பிரஸ்தாபிப்பான். 'எனக்கு எவ்வளவு அழகான பெண்டாட்டி வரப்போகிறாள் தெரியுமா? அப்ஸரஸ் என்றால் அவள்தான் அவ்வளவு அழகாய் இருக்கப்போகிறாள்?'' என்று அவளை வர்ணிக்க ஆரம்பித்துவிடுவான்.

எச்சுமுவும் பெரிய இடத்து ஸம்பந்தம் வேண்டும் என்று விரும்பினாள். ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜோ அல்லது ஒரு ஜில்லா கலெக்டரோ அல்லது ஒரு சீப் என்ஜினீரோ அதற்குக் குறைந்த அந்தஸ்துள்ள ஸம்பந்தியை அவள் மனதால்கூட நினைக்கவில்லை. தன்னுடைய லக்ஷண பிள்ளைக்கு இந்த உத்தியோகஸ்தர்களில் 'நான்' 'நீ' என்று முன்வந்து ஆயிரம், பதினாயிரமாய் பணத்தைக் கொட்டி சீர் வரிசைகளை எடுத்து கல்யாணத்தை விமரிசையாய் செய்வார்கள் என்று அவள் நம்பினாள். அதைப்பற்றி தினம் தன் வீட்டில் நடைபெறும் வம்பர் மகாசபையில் விமரிசையாய் பேசவும் பேசுவாள்.

அம்மகாசபை தினம் இரவு ஒன்பது மணிக்குமேல் எச்சுமுவீட்டு வாசல், விசாலமான திண்ணையில் கூடும். எந்த ராஜா எந்தப்பட்டணம் போனாலும் சரி! இடி இடித்தாலும் சரி, மழை கொட்டினாலும் சரி—சபை நடவடிக்கை நின்றுவிடாது.

இந்த சபையில் சர்ச்சை செய்யப்படாத விஷயம் யாதும் இல்லை. பிரபஞ்சவர்த்தமானம், நாட்டு நடப்பு, விலைவாசிகள் அக்கப்போர்—எல்லாம் அத்துபடியாய்விடும். சபையில் அக்கிராசனாதிபதி எச்சுமுதான். அவளுக்கு அடுத்தபடியாக கோடிவீட்டு சேஷியைத்தான் சொல்லவேண்டும். மற்றும் நாலைந்து ஸ்திரீகள் இவர்கள் எல்லாம் நடுநிசி வரையிலும் சர்ச்சை நடத்துவார்கள். சபை கலையும் பொழுது சில சமயங்களில் இரவு இரண்டு மணிகூட ஆகிவிடும்.

சேஷி ரொம்பவும் கெட்டிக்காரி. அவள் பேச்சோ முதல்ரகம், நரியைப்பரியாக சித்திரித்துக் காட்டுவாள். ஒன்றும் தெரியாத அப்பாவிமனிதனை அவள், அயோக்கிய சிகாமணி' என்று ருஜூப்படுத்துவாள். எந்த வீட்டில் என்ன நடக்கிறது என்பது அவளுக்குத் தெரியும். அவளுக்கு எட்டாத குடும்ப ரகசியம் இல்லை.

அவளுக்கு ஏற்ற ஜோடிதான் அவளது கணவன் ஜகப்புரட்டு ஜகன்னாதன். ஜகன்னாதன் ஒரு கமிஷன் தரகர். இன்ஷூரன்ஸ் ஏஜண்டு: பங்குமார்க்கட் நிபுணன். அவனது பேச்சோ அபாரம். வானத்தை வில்லாக வளைப்பான். மணலை கயிறாகத் திரிப்பான். அவ்வளவு வாக்கு சாதுர்யமும், பித்தலாட்டமும் புளுகு சுருட்டும் அவனுக்கு இல்லாவிட்டால் நாலு காசு எப்படிச் சம்பாதிப்பது?

ஜகன்னாதனின் நடை யுடை பாவனை பிரமாதமான ஆடம்பரம்தான். இடுப்பில் பால்போல் வெளுப்பான மல் வேஷ்டி, உடம்பில் பளபளவென்று ஸில்க் ஷர்ட், கழுத்தைச் சுற்றி விசிறி மடிப்பு கலையாத ஜரிகை அங்கவஸ்திரம், —இவற்றை எப்பொழுதும் அவன் அணிந்திருப்பான். கையில் எப்பொழுதும் தங்க கைக்கெடிகாரம்: வலது மோதிர விரலில் அழகான பச்சைக்கல் மோதிரம் இன்னும் மற்ற நாகரிக சின்னங்களுடன் அவன் காணப்படுவான்.

அவன் வீட்டு வாசலில் ஏதேனும் வண்டி நின்றுகொண்டே இருக்கும். பெரிய மனிதர் எவரேனும் அவனைப் பார்க்க வந்து கொண்டிருப்பார்கள். கமிஷன் ஏஜண்டு அல்லவா அவன்? ஜமீன்தார்களுக்கும் கடன் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்வதில் நிபுணன். அவனுக்குச் செல்வாக்கு அதிகம் இருந்தது.

ஆனாலும் என்ன? அவனுக்கு வருவாய்க்குமேல் செலவு இருந்து கொண்டு வந்தது. ஆடம்பரமாய் செலவு செய்தால்தானே அவனை நாலு பேர் மதிப்பார்கள் மேலும் வீட்டிலும் அவனுக்கு அதிகச் செலவுதான். அவனுக்கு அரை டஜன் பிள்ளை குட்டிகள். மேலும் அவனது அண்ணன் பிள்ளைகளும் அவனுடன்தான் இருந்தார்கள், எல்லாரையும் சம்ரக்ஷிக்க வேண்டும் என்றால் செலவைப்பற்றி கேட்க வேண்டுமா?

அவனுக்கு நான்கு பெண்களும், இரண்டு பிள்ளைகளும் இருந்தனர். மூத்தவள் தான் வஸந்தா. அவளுக்கு வயது பதினாறு. மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு அந்த வருஷம் போய் இருந்தாள். அவளுக்கு இளையவன் கண்ணன். அடுத்தாற்போல் வரிசையாய் பெண்கள்; குமுதம், சித்ரா, ஹேமலதா. கடைசி பிள்ளையின் பெயர் மோகன்.

ஆடம்பரமாய் வாழ்க்கை நடத்திய ஜகன்னாதனுக்கு வர வர கடன்உபத்திரவம்அதிகமாயிற்று. எனினும் அவர் எப்படியோ சமாளித்துக்கொண்டுதான் இருந்தார். அவருடைய மூத்த பெண் வசந்தாவை நல்ல பணக்கார இடத்தில் கல்யாணம் செய்ய வேண்டும் என்பது அவருக்கு ஆசை. ஆனால் பணத்துக்கு எங்கே போவது? அவருக்கு வழியேதும் புலப்படவில்லை.

வஸந்தா ரொம்பவும் அழகாய் இருப்பாள். அவளுக்கு ஆபரணங்களுக்கும் குறைவில்லை. ஆமாம்! ரங்கூன் வைரமும், கில்ட் நகைகளும் அகப்படும் இந்தக்காலத்தில் ஆபரணங்களுக்குக் கேட்கவேண்டுமா? ஜகன்னாதன் அவளுக்கு வேண்டிய மட்டும் அத்தகைய நகைகளை வாங்கிப் போட்டிருந்தார்.

அவற்றை அணிந்துகொண்டு அவள் அடிக்கடி தன் தாயுடன் எச்சுவின் வீட்டுக்கு வருவாள். அவளைப் பார்த்தால் போதும். ராஜாமணி தன்னையே மறந்து நின்றுவிடுவான். அவளது அழகில் சொக்கிப் போய்விடுவான். இதை புத்தி கூர்மையுள்ள சேஷி கவனித்து வந்தாள்.

ஒரு நாள் ஏதோ காரியமாக ராஜாமணி சேஷி வீட்டுக்கு வந்தான். கூடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ரேடியோ வைத் திருப்பிக்கொண்டிருந்த ஜகன்னாதன் அவனை. தன் பக்கத்தில் உட்கார வைத்தான். "வஸந்தா! ராஜாமணிக்கு காப்பி கொண்டு வா" என்றான். வஸந்தா அவனுடன் சரி சமமாகப் பழகுவளாதலால் அவன் கையில் காப்பியை கொடுத்துவிட்டு அருகேயுள்ள ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தாள்.

ராஜாமணி காப்பியை ருசி பார்க்கும்பொழுது ஜகன்னாதன் அவனை நோக்கி, "ஏண்டாப்பா! உனக்கு எப்பொழுது கல்யாணம்! எங்களுக்கு எப்பொழுது விருந்து சாப்பாடு போடப்போகிறாய் ?" என்று கேட்டான்.

ராஜாமணி "அம்மாவும் ராமு அம்மாஞ்சியும் எங்கெங்கேயோ பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் தகுந்த பெண் கிடைக்கவில்லை" என்றான்.

"பெண் எப்படி இருக்க வேண்டும்?" என்று கேட்டான் ஜகன்னாதன்.

ராஜாமணி "நம்ம வஸந்தா மாதிரி அழகாய் இருக்க வேண்டும்" என்றான்.

அப்படியானால் வஸந்தாவையே நீ ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது? என்று ஜகன்னாதன் கேட்டான்.

"போங்க அப்பா உங்களுக்குக் கேலிதான்" என்று முகத்தைக் கோணலாய் வைத்துக்கொண்டு உள்ளே ஓடினாள் வஸந்தா.

ராஜாமணி தேன் குடித்த நரியைப்போல்,, "எனக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் அம்மாவும், அம்மாஞ்சியும் என்ன சொல்லுவார்களோ?" என்றான்.

ஜகன்னாதன், 'ஏண்டா! கல்யாணம் பண்ணிக் கொள்ளுபவன் நீயா? அல்லது உன் அம்மாஞ்சியா? அவன்கெட்டபேர்வழி என்பது உனக்கும் உன் அம்மாவுக்கும் தான் தெரியாது. ஊர் எல்லாம் அவனது யோக்கியதை அறியும். உன் எஸ்டேட்டில் அவன் எப்படி கொள்ளை அடிக்கிறான்தெரியுமா? அது கிடக்கட்டும். இது இரகசியமாய் இருக்கட்டும். என் யோசனைபடி செய்தாயானால் உனக்கு நன்மையுண்டு" என்றான்,

பிறகு ஏதோதோ பேசிவிட்டு அவன் ராஜாமணியை அனுப்பினான். பிறகு தன் மனைவி சேஷியுடன் ஆலோசனை நடத்தினான்.

இரண்டு மாதங்களுக்குப் பின் ஜகன்னாதன் தனது புத்திரன் கண்ணனுக்கு உபநயனம் நடத்துவதாக தீர்மானித்தான். பிரார்த்தனை நிமித்தமாய் அந்த உபநயனத்தை குணசேகரம் என்ற வெங்கடாசலபதி க்ஷேத்திரத்தில் நடத்த திட்டம் போட்டான். முகூர்த்தத்துக்குத் தேவையான சாமான்களை சித்தம் செய்வதில் சேஷிக்கு ஓய்வு ஒழிவு இல்லை. உபநயனம் வைதிக கிரியையாதலால் அதிகமான விருந்தாளிகள் அழைக்கப்படவில்லை. ஆனால் எச்சுமுவும் அவளது பிள்ளையும் பெண்ணும் அழைக்கப்படாமல் இருப்பார்களா? அவாள் ஜகன்னாதன் குடும்பத்துக்கு ஆப்தர்களாயிற்றே?

எச்சுமு மறுத்துவிட்டாள். ராஜாமணியை மட்டும் அவள் அனுப்பினாள். குணசேகரத்து பெருமானுக்கு ஏதோ பிரார்த்தனை அவன் செலுத்த வேண்டியிருந்தது. அதைச் செலுத்திவிட்டு உபநயனத்துக்கும் இருந்துவிட்டு திரும்பி வரும்படி அவள் ராஜாமணியிடம் கூறினாள்.

உபநயனம் நடைபெற்ற அன்று சாயந்திரம் ராமு அவசர அவசரமாய் எச்சுமுவிடம் வந்தான். அவன் முகம் ஆத்திரத்தாலும் கோபத்தாலும் சிவந்திருந்தது. அப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு கையலம்பிய எச்சுமு "என்ன சமாச்சாரம் ராமு?" என்றாள்.

"பதட்டமான குரலில்" சமாசாரமா! அத்தை! சொல்லு

கிறேன் கேள். இன்று காலை குணசேகரத்தில் ராஜாமணிக் நக் கல்யாணம் நடந்ததாம்' என்றான். அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. "என்ன! ராஜாமணிக்கா கல்யாணம்! நீ ஏதானும் சொப்பனம் கண்டாயா?" என்று பதறினாள் எச்சுமு.

"சொப்பனம் இல்லை அத்தை உண்மைதான். இன்றுகாலை இந்த ஊர் பெரிய கோவில்பட்டாசாரியார் குணசேகரத்துக்குப் போயிருந்தாராம். அவர் கண்ணாலே பார்த்தாராம். கோவிலிலே ராஜாமணி அந்த ஜகப்புரட்டன் ஜகன்னாதன் பெண் வசந்தாவின் கழுத்தில் தாலி கட்டுவதை கண்டு அவருக்கு ரொம்பவும் ஆச்சரியம் உண்டாயிற்றாம். உடனே அவர் ஜகன்னாதனை விசாரித்தாராம். அவரிடம் அந்த அயோக்கியன் என்ன சொன்னான் தெரியுமா? "ராஜாமணி வெகு நாட்களாய் வஸந்தாவை தனக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தான். அதற்கு நான் முதலில் சம்மதிக்கவில்லை. 'உன் அம்மாவின் சம்மதம் வேண்டும்' என்றேன். அதற்கு அவன் 'என் அம்மா பேராசைக்காரி. ரொம்பவும் பெரிய இடத்து சம்பந்தம் வேண்டும் என்கிறாள். எனக்கு வஸந்தாவைத்தான் மனைவியாகக் கொள்ளவேண்டும் என்று ஆசை. என் அம்மாவுக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன். இதற்கு நீங்கள் சம்மதிக்கவேண்டும்' என்று வற்புறுத்தினான். அதன்பேரில்தான் கல்யாணம் இங்கே நடக்கிறது. ராஜாமணி சிறு குழந்தையல்ல. அவன் மேஜராகி மூன்று மாதம் ஆகிறது. ஆதலால் இந்த விவாகத்தில் ஒழுங்கு தவறு யாதும் இல்லை என்றானாம். எப்படி இருக்கு நியாயம்" என்று நிறுத்தினான்.

மறுவினாடி எச்சுமு பெரிய குரலில் அழ ஆரம்பித்துவிட்டாள். "ஐயோ! பாவி கெடுத்துவிட்டானே! குடி முழுகி போய்விட்டதே! சண்டாளி என் தலைமேல் நெருப்பை அள்ளிப் போட்டுவிட்டாளே!" என்று ஓலமிட்டாள்.

அவளது வீட்டு வாசலில் ஜனத்திரள் கூடிவிட்டது. "என்ன ஆபத்தோ, ஏதோ" என்று கவலையுடன் விசாரிக்க வந்தவர்களுக்கு சற்று நேரத்துக்கெல்லாம் உண்மை தெரியவந்தது. "பைத்தியக்காரி! அழுவதைப் பார். பிள்ளை கல்யாணம் பண்ணிக் கொண்டான் என்பதற்காக எந்த தாயேனும் அழுவாளா?" என்றார் ஒருவர். "ஆமாம்! வயதாயிற்று. கல்யாணம் பண்ணிவைத்துக் கொண்டிருந்தால் சும்மா இருப்பானா பையன்! வேண்டும் இவளுக்கு இந்தப் படிப்பினை!" என்றார் இரண்டாமவர். "ராஜாமணி அசடாயிற்றே! அவனையா வசந்தா கலயாணம் பண்ணிக் கொண்டாள். அப்படியானால் அவன் அதிர்ஷ்டசாலிதான்' என்று தீர்ப்புக்கூறினார் மூன்றாமவர். இப்படிப் பலர் பலவாறு கூறிக்கொண்டே எச்சுமுவைக் கேலி செய்துகொண்டே போனார்கள்.

இனி கூறவேண்டியது அதிகமில்லை. ஒரு வாரத்துக்குப்பின் ஜகன்னாதனும் சேஷியும் ராஜாமணியையும், வசந்தாவையும் அழைத்து வந்தனர்.

அதற்குமுன் ஜகன்னாதன் ராஜாமணியிடம் அவனது எஸ்டேட்டை நிர்வகிக்கும்படியான சர்வாதிகார பத்திரம் வாங்கிக்கொண்டுவிட்டான். அவன் செய்த முதல் வேலை ராமுவை வேலையிலிருந்து நீக்கியதுதான். அதுமட்டுமல்ல, ராமு மீதும் எச்சுமுமீதும் எஸ்டேட் சம்பந்தமான கணக்கு விஷயமாய் தாவாவையும் போட்டான். அவர்களை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டான்.

இப்பொழுது ஜகன்னாதன் வைத்ததுதான் சட்டம். ராஜாமணிக்கு அவன் ஒரு கேரம் பலகையை ரேடியோவையும்வாங்கிக் கொடுத்திருக்கிறான். ராஜாமணிக்கு பொழுது போக்குக்கு இனி சிரமமில்லை. அவன் படிப்பை நிறுத்திவிட்டான். ஆனால் வஸந்தா மெட்ரிகுலேஷன் தேறி கலாசாலையில் படிக்கிறாள். ராஜாமணியை அவள் லட்சியம் செய்வதே இல்லை. அவனுக்கு அவளிடம் அன்பும் பயமும் அதிகம்.

இப்படி எல்லாம் ஒரு வருஷத்துக்குள் தலை கீழாய் மாறிவிட்டது. எச்சுமுவின் சபை கலைந்துவிட்டது. சம்பந்தியம்மாளுக்கும், சம்பந்தியம்மாளுக்கும்தான் தீராபகை ஆயிற்றே! கதை எப்படி இருக்கிறது" என்று கோமு அம்மாமி முடித்தாள்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

கசங்கிய மலர்

வாமன்

மனிதனுக்கு நல்ல நடத்தை இல்லாவிடில் என்ன பிரயோசனம்!—இந்த வார்த்தை அவன் காதுகளில் ரீங்காரம் செய்தன. ‘நல்ல நடத்தை!’’ இதன் அர்த்தம் என்ன? அவன் படித்த பாடங்களிலிருந்து ராதையின் தந்தை நல்ல நடத்தை உள்ளவராகவே காணப்பட்டார். அவர் குடிகாரர் என்று நினைக்கவேயில்லை; நினைப்பதும் இல்லை; நினைக்கப் போகிறதும் கிடையாது.

திடீரென்று ஒன்று அவனுக்கு நினைவு வந்தது. அந்த ஆல்பம்; அதில் உள்ள அந்தப் புகைப்படம்; அதைக் கண்டதும் ராதை கண்ணீர் விட்டது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் அது மேடையிலோ, படத்திலோ நடிக்கும் பொழுது எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டான்.

ஆனால் அவரது வாழ்க்கை! அந்தப் புகைப் படத்தில் காணப்பட்ட மாதிரியே இருக்குமா? இதைத் தானா நல்ல நடத்தை இல்லையென்பது?......தன்னை அவருடன் பழகாமலிருக்கக் கண்டிக்கும் அப்பாவின் காரணமும் இதுதானா?......தன்னைப் போல் ராதையின் அப்பாவை இவர் அறிந்திருப்பாரா?

அவன் அவருடன் கூடவே இருக்க விரும்பினான். தன் அன்பு முழுவதையும் அவருக்கே அர்ப்பணித்து விட விரும்பினான். அவர் குடிகாரர் என்பதைக் கேட்ட பிறகு கூட, அவன் இதயம் அவர்பால் வைத்திருந்த மரியாதையையும், அன்பையும் இழக்கவில்லை. கிருஷ்ணமூர்த்தி வெகு கெட்டிக்காரர். சாமர்த்தியசாலி. அன்பாலேயே ஆக்கப்பட்டதோ என்று ஐயுறும்படியான இருதயத்தை உடையவர் என்று அவன் உள்ளம் சொல்லிற்று.

* * * *



7

அன்றிரவு எப்பொழுது தூங்கினான் என்று அவனுக்கே தெரியாது.

மறுநாள் காலையில் வழக்கம்போலவே ராதையின் வீட்டிற்குச் சென்றான். அவளுடைய தகப்பனார் தலைக்கு ஏதோ வாசனை எண்ணெயைப் போட்டு தூக்கி நின்ற தலை மயிரைப்படிய வைத்துக்கொண்டிருந்தார். கூடவே ராதைக்கு ஆங்கிலத்தில் ‘பூனையையும், எலியையும் கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தார். ராதையின் கையில் ஆங்கில அரிச்சுவடிப் புத்தகம் ஒன்று இருந்தது.

“நமஸ்காரம்’’ என்றான் ராமு.

“நமஸ்காரம். வா, வா. எங்கே, சென்னை மாகாணத்திலுள்ள நதிகள் யாவும் தெரிந்துவைத்திருக்கிறாயா, பார்ப்போம்’’ என்று கூறிக் குதூகலத்துடன் அழைத்தார்.

கிருஷ்ணமூர்த்தி நேற்றுதான் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா நதிகளையும், மலைகளையும் கரும்பலகையில் எழுதிக் காட்டிக் கற்றுக்கொடுத்திருந்தார். அதை

அவன் இன்னும் பாடம் பண்ணவில்லை. இருந்தாலும் தவறு ஒன்றுமில்லாமல் சரியாக விடையளித்து விட்டான்.

“ரொம்ப கெட்டிக் காரப்பயலடா, நீ!” என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் கிருஷ்ணமூர்த்தி.

ஏனோ ராமுவிற்கு அச்சமயம் அழுகை வந்து விட்டது. அப்பொழுது அவர் மெதுவாக அவனை அணைத்துக் கொண்டு காரணம் கேட்டபொழுது, அழுகை பலப்பட்டு விம்மலாக வெளிப்பட்டது.

சிறிது நேரம் பங்களாவில் இருந்துவிட்டு வீட்டிற்குச் சென்றான். எப்பொழுது வருவான் என்று காத்திருந்தவர் போல் அவன் தகப்பனார், “ராமு! இங்கே வா,” என்றார்.

“ஓஹோ! சொல்லச் சொல்ல உடம்பில் திமிர் ரொம்ப ஏறிப் போச்சுபோலிருக்கிறது,” என்று கூப்பாடு போட்டார். அவர் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன.

“இதுவரையில் ஒரு ஆயிரம் தடவை ராதை வீட்டுக்குப் போகாதே, ராதை வீட்டுக்குப் போகாதே என்று சொல்லி இருக்கிறேன். இன்னும் அந்தவழக்கத்தை விடாமலா இருக்கிறாய்?”

அவர் கை ஒரு பெரிய பிரம்பைச் சுழற்றுவதை ராமுவின் கண்கள் கவனித்தன.



ராமுவிற்கு அவன் தகப்பனார் இம்மாதிரி வறட்டுக் கூச்சல் போடுவதைக் கண்டு கோபம் வந்தது. பற்களைக் கடித்துக்கொண்டு, அவர் ஓரமாக ஒட்டி, இருந்த இடத்தை விட்டு நகராமல நின்றான். தந்தையின் கைப் பிரம்பு அவருடைய தலைக்கு மேல் சென்று வெகு வேகமாக அவனை நோக்கி சீறிற்று.........

இதன் பின் ஒருவாரம் கழிந்தது.

இப்பொழுதெல்லாம் ராமு பள்ளிக்கூடத்திற்கு வேறு வழியாகப் போனான். மாடிப் பக்கம் போவது கூடக் கிடையாது.

ஒரு நாள் இம்மாதிரி பள்ளிக்குச் சென்று திரும்பிய பொழுது தன் வீட்டு வாயிலில் நின்று நண்பன் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது யாரோ அவன் முதுகில் தட்டினார்கள். ராமு திடுக்கிட்டுத் திரும்பினான். ராதையின் தந்தை முன்னால் நின்று புன்னகை செய்தார். ஐயோ! அதே புன்னகை! அவன் மனதைக் கொள்ளை கொண்ட புன்னகை அது.

“என்ன ராமு! எங்கே இத்தனை நாளாக உன்னைக் காணவில்லை? ஏன் வீட்டுக்கு வருவதில்லை? ராதை உன்னைக் காணுமல் ரொம்ப வருத்தப்படுகிறாள். அப்புறம் நீ வகுப்பில் முதலாவதாக வரவேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டாய் போல இருக்கிறதே? என்கூட வா. இப்போ உனக்காக சென்னை மாகாணம் ஒன்றை மண்ணிலேயே செய்து வைத்திருக்கிறேன். ஒரு தடவை பார்த்தாயானால் நதிகளையும், மலைகளையும் எப்பொழுதுமே மறக்கமாட்டாய், வா,” என்றார், மனதிலுள்ள அன்பை வர்ஷித்துக்கொண்டே.

ராமு அவரை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தான். மறு விநாடியே கையை பலமாக ஆட்டிக் கொண்டு கூவினான். “ஐயோ! முடியாது, முடியாது. நீங்க போய் விடுங்கோ, மாமா!” என்று கத்திக்கொண்டே வீட்டிற்குள் ஓடினான். தன் அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு தரையில படுத்துக் கதறினான். அழுகை குமுறி வந்தது.

அவனது மலர் போன்ற இளம் உள்ளம் எப்படிக் கசக்கப்பட்டு எறியப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தவர்கள் அவனுக்குத் தெரிந்தவரையில் ஒருவருமே கிடையாது.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

8

சேக்கிழாரும் கிராம ஆட்சியும்

★

பி. ஸ்ரீ.

நமது நாகரிகம் நதிக்கரைநாகரிகம். தமிழர்கள் திரைகடலோடியும் வாணிபம் செய்து பொருள் தேடியது உண்மைதான். எனினும் நம் தமிழ் நாகரிகம் வெள்ளையரின் நாகரிகம் போல் கடற்கரை நாகரிகமாகிவிடாமல், தீவாந்தர நாகரிகமாகாமல், ஸாராம்சத்தில் நதிக்கரை நாகரிகமாகவே பெருகிவந்தது. நதிக்கரை நாகரிகம் என்பது முக்கியமாகக் கிராம நாகரிகம், காஞ்சி. உறையூர், மதுரை, வஞ்சி, மயிலை முதலான நகரங்கள் முன்நாளில் பிரசித்தி பெற்றவைதான். எனினும் தமிழகம் கிராமத் தமிழகம்தான்.

பலவகைச் சபைகள்

பழைய சங்க நூல்களில் 'மன்றம்' என்ற சொல் பல இடங்களிலும் வருகிறது. இந்தச் சொல்லுக்கு உரையாசிரியர் 'ஊருக்கு நடுவே எல்லாரும் இருக்கும் மரத்தடி' என்று பொருள் கூறுகிறார். அரசனால் விதிக்கப்பட்ட தண்டனைகள் இந்த ஊர் மன்றங்களில் நிறைவேற்றப்பட்டன. 'ஊர்' என்பது பெரும்பாலும் கிராமத்தையே குறிக்கும்.

சாசனங்களில் நாலுவகை ஜனக்கூட்டங்கள் குறிக்கப்படுகின்றன,—ஊர், சபை. நகரம், நாடு என்று. ஊர், நகரம், நாடு என்ற இச் சாதாரண வார்த்தைகள் மூன்றும் அந்நாளில் தலங்களை மட்டும் குறிக்கவில்லை: அத்தலங்களுக்கு உரிய ஜனக்கூட்டங்களையும் குறித்து வந்தது. இந்நாளில் பஞ்சாயத்து, முனிஸிபாலிடி, கார்ப்பொரேஷன் என்ற ஜன சங்கங்கள் இருப்பதுபோல் முன்நாளிலும் பலவகைச் சங்கங்கள் இருந்தன என்று கருதலாம்.

நகரம் என்ற சங்கம் வாணிபம் மலிந்த பெரிய ஊரின் கூட்டம். வணிகர் கூட்டத்தையே 'நகரம்' என்பதுமுண்டு. வணிகரை 'நகரத்தார்' என்கிறோம் இன்னும். பல ஊர்கள் சேர்ந்த பிரிவை 'நாடு' என்றார்கள் அந்நாளில். இந்நாளில் 'தமிழ் நாடு' என்றும் 'இந்திய நாடு' என்றும், தேசத்தையோ தேசப் பெரும் பகுதியையோ குறிக்க உபயோகப்படுவதுபோல், அந்நாளில் 'நாடு' என்ற சொல் வழங்கவில்லை. இப்போது வழங்கும் தாலூகாவின் விரிவுதான் சுமாராக நாடு என்ற பிரிவுக்கும் அந்நாளில் இருந்ததென்று சொல்ல வேண்டும். நாட்டுச் சபையில் ஊர்ப்பிரதிநிதிகள் கலந்துகொண்டு சாசனங்களில் கையொப்பமிடுவார்கள். நாட்டுச் சபையினரை 'நாடு' என்றும், 'நாட்டார்' என்றும் குறிப்பிடுவதுண்டு. தனவணிக நாட்டில் இன்றும் 'அம்பலகாரர்' என்றும், நாட்டார்' என்றும் ஒரு வகுப்பினரைக் குறிப்பிடுகிறார்கள்.

சுதந்திர உரிமைகள்

இக்கூட்டங்களுக்கெல்லாம் நிர்வாகக் கழகங்களும் இருந்தன. அந்தந்தக்கூட்டத்தினரே நிர்வாகக் கழகங்களைத் தேர்ந்தெடுக்கத் தக்க சட்டதிட்டங்களையும் அமைத்துக்கொண்டனர்.

பொதுக்கூட்டங்களுக்கு யாரும் வரலாம். அபூர்வமாகத்தான் பெருவிவகாரங்களில் அரசாங்க அதிகாரிகளின் உதவியை மக்கள் நாடுவார்கள். ஆகவே பொதுக் காரிய நிர்வாகங்களில் கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் சுதந்திரமான உரிமைகள் இருந்தன என்று சொல்லவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சபை இருந்தது, அச்சபையில் ஆண்மக்கள் யாவரும் உறுப்பினர். அவர்கள் தேர்ந்தெடுத்த நிர்வாகக்கழகமே கிராம ஆட்சி முழுவதையும் நடத்திவந்தது. அக்கழகத்தின் சுய அதிகாரம்தான் கிராம மக்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் கவனித்து வந்தது.

கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் உண்டு; புஸ்தகசாலைகள் உண்டு; ஆஸ்பத்திரிகள் உண்டு. ஆஸ்பத்திரியை 'ஆதுலசாலை' என்றும், 'ஆரோக்கியசாலை' என்றும் கூறுவதுண்டு. இவற்றையெல்லாம் கிராம நிர்வாகக் கழகம் கவனித்து வந்தது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற கொள்கையை உடைய தமிழர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் கோவில்கள் கட்டிவைத்தார்கள். கோவில் என்றால், நிலங்கரைகள், தருமப்பணங்கள், உத்ஸவங்கள் உண்டல்லவா? இவற்றையெல்லாம் செவ்வையாக நடத்தவேண்டியது நிர்வாகக் கழகத்தின்

கடமையும், கிராமக்கூட்டத்தின் கடமையுமாகும்.

உரிமையில்லாமல் கடமை மட்டும் இருக்கமுடியுமா? பொதுவாகக் கிராம ஆட்சி கிராம மக்களின் உரிமையும் கடமையுமாகும். கிராமத்தின் ஜனத்தொகை, செழிப்பு முதலிய அம்சங்களுக்கு இணங்கப் புதிய புதிய வசதிகள் செய்து கொள்வதும், கிராமவாசிகளின் கடமையும் உரிமையுமாகும். அவர்களே நிலவரியை வசூலித்து அரசாங்க அதிகாரிகளிடம செலுத்துவார்கள். ஆகவே தங்கள் காரியங்களில் விசேஷமான சுதந்திரம் இருந்ததென்று சொல்லலாம்.

சோழரும் கிராம சுய ஆட்சியும்

'சரியான அரசியல்முறை ஊர்களில் எல்லாம் நிலவவேண்டும்' என்ற பெருங் கவலை சோழ மன்னர்களுக்கு உண்டு. சோழ அரசாங்கம் ஒரு பலமான மத்திய அரசாங்கமாகவே இருந்தது எனினும் அத்தகைய அரசாங்கத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு குட்டிக் குடியரசாகத் தழைத்தோங்கியது. கிராம ஆட்சியின் மிகச் சிறந்த காலம் சோழ ஆதிக்கத்தில்தான்.

அந்த ஆதிக்கத்தில், செம்மையாக நடந்து வந்த கிராம ஜனநாயக ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெற்ற காலம் வரையிலும் பெரும்பாலும் அப்படியே நடைபெற்று வந்திருக்கிறது.

அழியாத குடியரசும் அழிந்தது !

மத்திய அரசாங்கம் மாறிக் கொண்டிருந்தது. அரசியல்-பூகம்பங்களும் புரட்சிகளும் ஏற்பட்டன. அன்னியப் படையெடுப்புகள் புற்றீசல் போலப்புறப்பட்டன. புறச்சமயிகள் புகுந்து தேசத்தைக் கலக்கிவிட்டு வெளியேறினார்கள்; குடியேறவும் செய்தார்கள். எனினும் இந்து தர்மத்தையும், நாகரிகத்தையும் பண்பாடுகளையும் அழியாமல் பாதுகாத்து கிராமக்குடியரசின் பெருமைதான், அத்தகைய குடியரசுகளை—மகமதியர் படையெடுப்புகளாலும், ஆட்சிமுறைகளாலும் அழிந்துபோகாத அத்தகைய

ஜனநாயகங்களை அழித்ததும் பிரிட்டிஷ் ஆட்சியின் பெருமைதான்!

சேக்கிழார் கொள்கை

உண்மை இப்படி இருந்தும் பெரியபுராணத்தை நன்கு கற்றிருக்கும் ஓர் அறிஞர் 'குடியரசுக் கொள்கை அக்காலத்திலே காணப்படவில்லை, அரசரைக் காத்தற்கடவுளின் அம்சமாகவே கருதினார்கள். எனவே இராசத்துரோகமான தீய எண்ணம் அந்நாளில் மக்கள் மனத்தே உண்டாகக் காரணமே இல்லாதிருந்தது என்று தமது ராஜ பக்தி தோன்றக் கூறியுள்ளார்.

அந்நாளில் அரசன் கடவுளின் அம்சமாய்க் கருதப்பட்டது உண்மைதான். மக்களையெல்லாம்—-ஏன் உயிர்க்குலம் முழுவதையும்—இறைவனது கேயிலாகக்கருதியவர்கள், தருமத்தின் கவசமாகிய அரசனையும் காத்தர்க்கடவுளின் அம்சமாகக் கருதியதில் அதிசயமில்லை. ஆனால் ராஜ தருமத்தைத் தவறாது செய்பவனே அரசன் என்று அவர்கள் கொள்கை. அறம் காப்பானே அரசன் என்றுதானே சேக்கிழார் பெருமானும் கூறியுள்ளார்?

'மாநிலம் காவலனாவான்......... ...(1) தன்னால், (2) தன் பரிசனத்தால், (3) ஊனமிகு பகைத்திறத்தால், (4) கள்வரால், (5) உயிர்தம்மால், ஆனபயம் ஐந்தும் தீர்த்து, அறம் காப்பான் அல்லனோ?' என்று எவ்வளவு தெளிவாய்த் தம் கொள்கையை வெளியிடுகிறார்! இப்படிச் செய்யாத அரசன் அரசனல்லன், கள்

வன்— பொது ஜனத் துரோகி என்பது சேக்கிழார் குறிப்பு. ராஜத் துரோகத்தைக் காட்டிலும் சேக்கிழார் பெருமான் பொதுஜன துரோகத்தையே அதிகமாய் கண்டிக்கிருர் என்றுஊகிப்பதுத் தவருகாது.

அமைச்சர் சேக்கிழார்

அரசன் அறத்திற்கு அஞ்சித் தெய்வத்திற்கு அஞ்சிக் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியே வாழ்ந்துவரவேண்டும் என்பது சேக்கிழார் பெருமானின் கருத்து. அதிகாரங்களையெல்லாம் அரசன் தலைமை பூண்டு செலுத்திவந்தபோதிலும், பேரறிஞர்களான அமைச்சர்களைக் கலந்து அவர்களுடைய உதவியைப்பெற்றே அரசியல் நிர்வாகம் நடத்திவந்தான். குடிகளுக்குத் தீங்கும் அநீதியும் ஏற்படாமல் காப்பதே தங்களுடைய அதி முக்கியமான கடமையென்று கருதிய அமைச்சர்களைக் கலந்துதான் அரசன் தன் விருப்பங்களைச் செய்து முடிக்கும் உரிமை பெற்றிருந்தான். பேரரசனின் ஆணைக்கு அடங்காத சிற்றரசர்களை அடக்குவது எப்படி அமைச்சர் கடமையாக இருந்ததோ, அப்படியே அந்தப் பேரரசனையும் தருமத்திற்கும் தெய்வத்திற்கும் அடங்கச் செய்து குடிகளுக்கு நன்மைவிளைப்பதும் அமைச்சர் கடமைதான். இத்தகைய அமைச்சராகத்தான் சேக்கிழார் இருந்திருக்கவேண்டும்.

இத்தகைய அமைச்சர்களும், அரசர்களும் மனம் ஒத்துக் கிராம ஆட்சியின் சுதந்திர மாட்சிக்குச் சிறிதும் குறைவு வராமலே ராஜ்ய காரியங்களை நடத்தி வந்தார்கள். முதல் மந்திரியாக இருந்த சேக்கிழார் பெருமான் கிராம ஆட்சியின் மகோன்னத நிலையைக் கண்டிருந்தவரென்றும், அதை நன்கு பரிபாலித்தவரென்றும் கருதலாம். ——



அம்மாப்பேட்டை ஸ்ரீமான் பி. வெங்கடராமய்யர் எம். எல். ஏ., யின் பெண் ஸௌ. ஸத்தியபாமாவுக்கும், குடந்தை ஸ்ரீ கே. எஸ். விச்வநாதய்யர் குமாரரும் நாகபுரி, ரீஜினல் மிட்ரலாஜிகல் ஸெண்டர், ஸீனியர் அப்ஸர்வருமான ஸி. வி. ராமமூர்த்திக்கும் சமீபத்தில் விவாஹம் நடந்தது.

அட்டைப்படம்

★

மாஜி இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்து தம் பதவியை ராஜாஜியிடம் ஒப்படைத்துச்சென்ற மவுண்ட்பாட்டன் பிரபுவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பிரதம மந்திரி நேருவிடமிருந்த அன்பை அளவிட்டுச்சொல்லி முடியாது. சென்ற 21-ந்தேதி யன்று பண்டித நேரு, மவுண்ட்பாட்டன் தம்பதிகளின் குமாரி பமிளா மவுண்ட்பாட்டனை தமது குமாரியைப்போல கருதி இன்மொழி கூறி விமானமேற்றிவிடச் சென்ருர். இருவரும் விமான கூடத்துக்குச் செல்லுகின்றனர்.



ராவ்ஸாகிப் ஆர். நீலகண்டன் பெண் ஸௌ. கமலாவுக்கும், கும்பகோணம் முனிஸிபல் ஹெல்த் ஆபீஸர் ஸ்ரீ நடராஜ அய்யர் குமாரன் சிரஞ்சீவி என். ராஜனுக்கும் சமீபத்தில் விவாஹம் நடந்தது.



உடல் இளைப்பு

—❀—

வைத்திய ரத்ன பண்டித

எம். துரைசாமி ஐயங்கார்

ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருந்து வருபவனே வாழ்க்கையின் பயனை உண்மையில் அனுபவிக்க முடியும். திடகாத்திரம் என்பதற்கு நேர்மாறான நிலைமை உடலிளைப்பாகும். இதை ஆயுர்வேதத்தில் 'கார்ச்யம்' என்றும் 'க்ஷீணம்' என்றும், 'அங்கசோஷம்' என்றும் பல பெயர்களால் வழங்குவர். போஷணைக் குறைவால் சரீரத்தின் ஒரு பகுதியாவது, முழுச்சரீரமாவது இளைத்துப்போகலாம்.

தேகதாதுக்களில் இடையருது சில அம்சங்கள் கழிந்து அழிவடைந்துகொண்டே இருக்கும். அது இயற்கை. இவ்வித அழியும் அம்சங்களைச் சரிப்படுத்த ஓரளவு போஷணையளித்து வருவது அவசியம். உடலின் ஒரு பகுதியிலோ அல்லது உடலெங்குமோ ஏற்றபோஷணைச்சத்துக்கள் அவ்வப்போது போய்ச் சேராவிடில், அவ்வவயவம் அல்லது முழு உடலும் பருமனில் குறைந்து, வாடிச் சுருங்கிவிடும். உடல் ஆரோக்கியமாயிருக்கையில் கழிவுக்குச் சமானமான போஷணை தாதுக்களில் அவ்வப்பொழுது சேர்ந்துவரும்.

நமது தேகத்தில் அல்லது நமது தேகத்தின் ஒரு பாகத்தில் எவ்வித அநாரோக்கிய நிலைமை ஏற்பட்ட போதிலும், போஷணை என்னும் கழிவைச் சரிப்படுத்தும் இவ்வேலை சற்றேறக்குறைய தடையுறுவது இயல்பு; இக்காரணத்தினால் உடலனைத்தும் அல்லது குறிப்பிட்ட உடலின் ஒரு பகுதி சொற்ப போஷணையைப் பெறும் அல்லது போஷணை சிறிதுமின்றியே தளர்ந்து போகும்.

உடலிளைப்பு அநேக காரணங்களால் உண்டாகும். வேறு வியாதிகளைக் காரணமாகக் கொள்ளாமல், சாரமில்லாத (போஷணைக்குரியதல்லாத) உணவுகளையே உட்கொள்வதால் உடலிளைப்பு ஏற்படலாம். வெறும் அரிசியிலும்,மாப்பண்டங்களிலும் போஷணைச் சத்து மிகக் குறைவு: அத்தகைய உணவுகளை உண்பவருக்கு, முக்கியமாக அதையே உணவாகக் கொள்ளும் குழந்தைகளுக்கு, தாதுக்கள் நன்கு போஷணையைப் பெறுமல் உடலிளைப்பு ஏற்படும்.

இளங்குழந்தைகளுக்குப்போஷணைச் சத்து இல்லாத அன்னம், அவ்வித கஞ்சி முதலியதை ஊட்டுவதால் உடல் போஷணையின்றி இளைத்து விடும்: இதை இளம்பிள்ளை வாதமென்றும், பாலக்கிரஹம் அல்லது கிரஹதோஷமென்றும் பாமர ஜனங்கள் கூறுவர். குழந்தைகளுக்கு இவ்வித உடலிளைப்பு உண்டானல், சாக்குத்தூள், சாம்பல், சுவரிலிருந்து மண்பொறுக்கு முதலியவற்றைத் தின்பதற்குப் பழக்கமும், ஆவலும் ஏற்படும். நாம் கொடுக்கும் உணவில் போஷணைக்குத் தேவையான ஸத்து இல்லாமையால், மண் முதலியதை உண்பதற்குக் குழந்தை ஆவல் கொள்கிறது.

ஒன்றிலிருந்து மூன்றும் வயது வரையில் இவ்வுடலிளைப்புடன் குழந்தைகளுக்கு எலும்புருக்கி என்னும் பக்கரோகம் தொடர்ந்தேற்படுவதுண்டு. இக்குழந்தைகள் கைகால்கள் சூம்பி, எழுந்து நடக்கச் சக்தியற்றிருக்கும். மார்பு குறுகி, வயிறு பருத்து, முகம் தெளிவாகக்காணப்படும். பக்கரோகத்திற்குப் பதிலாக, உடலிளைப்புள்ள குழந்தைகளுக்கு வயிற்றில் கிருமிகள் உண்டாயிருக்கும். குடலில் பூச்சிகள் இருந்தால் தூங்கும்போது பற்களைக் கடிப்பதும், பக்கவாட்டில் தலையை ஆட்டுவதும், பிதற்றுவதும், சில ஸமயம் வாந்தி செய்வதும் குறிகளாகக் காணும்.

பெரியவர்களுக்கு உடலிளைப்பு உணவுக்கேற்ற அளவான உடலுழைப்பு அல்லது தேகப்பயிற்சி இல்லாமையாலும், க்ஷயரோகத்தினாலும் விஷப்பாண்டு என்னும் (ஒருவகை மூத்திரகோச) வியாதியாலும் அசுத்தமான இடங்களில் வாஸம் செய்வதாலும், அஜீர்ண ரோகத்தினாலும் ஏற்படுவது வழக்கம். உடலிளைப்புக்கு முக்கிய காரணமாயுள்ள நோய்களுள் முதன்மையானது அஜீர்ணமேயாகும். மூளையும், நரம்பு மண்டலமும் சுறுசுறுப்பாக உழைத்து வராவிட்டாலும், உத்ஸாகக் குறைவு ஏற்பட்டாலும் உடலிளைப்பு காணும்.

உண்ணும் உணவில் போஷணைக் குறைவினால் அல்லது போஷணைச் சத்து இன்மையினால் உண்டாகும் உடலிளைப்பில் பின்வரும் குறிகளைக் காணலாம்:— செய்யவேண்டிய வேலைகளில் சுறு

சுறுப்பு குறையும்: ஆயாஸம் தோன்றும்; சொற்ப தூரம் நடந்தாலும், அற்பவேலை செய்தாலும் மயக்கமும், தலை கிருகிருப்பும் காணும்: எப்பொழுதும் சோர்வுற்ற நிலைமை ஏற்பட்டிருக்கும்: உடலிலுள்ள தசைகள் தளர்ந்து இளைத்து வலுக்குன்றியிருக்கும். சில சமயம் முகம் விம்மிக் குளுப்பையுடன் தெளிவாயிருப்பதாகத் தோன்ற, உடல் மாத்திரம் வாடி இளைத்திருக்கும்.

முற்கூறிய குறிகள் குழந்தைகளுக்கும்,சிறுவர்களுக்கும் விசேஷமாகத் தோன்றும் ஆரம்ப தசையில் ஜுரம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவது அரிது: ஆனாலும் நாளுக்கு நாள் ஊன்றிக்கவனித்து வந்தால் மாலை நேரங்களில் சர்மம் மிக காங்கை கொண்டிருப்பதையும், இரவில் உடல் மிகவும் வியர்ப்பதையும், காலையில் பலங்குன்றி பிணியாளி ஆயாஸமுறுவதையும் உணரலாம் குழந்தைக்கு எதிலும் விருப்பமிராது; உணவை வெறுக்கும். பசி மந்தித்துவிடும்.

தகாத உணவுகளைக் கொடுப்பதாலாகும் உடலிளைப்பு நோயில் வாந்தி, அதிஸாரம் (அஜீர்ண பேதி), வயிற்றுக்கடுப்பு இவை ஏற்படும். உடலிளைப்புக்கு குடற்கிருமிகள் காரணமாயிருந்தால், குழந்தை அடிக்கடியும் நிமுண்டிக் கொள்ளும்; உதட்டையும் அவ்விதமே செய்யும்; வயிற்றில் வலியும் வேறுவகை வேதனைகளும் காணும்; மல சோதனை ஒழுங்காயிராது: மூச்சுக்காற்று ஒருவித துர்நாற்றமுள்ளதாயிருக்கும்; நாக்குத்தடித்து அழுக்கடைந்து காணப்படும், நீர் மஞ்சளாகவும் அழிற்சியுடனும் இறங்கும் தூங்கும்போது திடீரென்று அலறிக்கொண்டு பயப்படும்.

பெரியவர், குழந்தைகள் அனைவருக்கும் வயிற்றுக் கிருமியினால் ஏற்படக்கூடிய குறிகள் பின்வருமாறு :—அடிக்கடியும் தலைவலி காணும்; தலைசுற்றலும் ஏற்படும். வறட்டிருமலும், ஹ்ருல்லாஸமும் என்ற இருதயத் துடிப்புங்கூட சிலருக்குஇருப்பதுண்டு.விக்கலும் வாந்தி வரும் போன்ற உணர்ச்சியும் காணலாம். ஸ்திரீகளானால் ஸூதகஜன்னி என்கிற நோய்க்கு ஏற்படக்கூடிய குறிகள் பலவும் தோன்றக்கூடும். இவையெல்லாம் அங்கசோஷம் என்ற உடலிளைப்புக்குக் காரணமாகத் தோன்றுபவை என்று நினைவில் வைக்கவேண்டும்.

கிரந்திசோஷம் என்று ஒரு வகை உடலிளைப்பு உண்டு. இதில் உதரத்துக்குள் அடங்கிய கிரந்திகள் என்ற கோளங்கள் பருத்துப்போயிருக்கும். அக்கிரந்திகள் வியாதிகொண்டு வீங்கினால், மலபந்தமும், அதிஸாரமும் மாறி மாறி ஏற்பட்டுத் தொந்தரவளிக்கும். க்ஷயரோகத்தில் காணக்கூடிய விதமான ஜ்வரமும், இரவில் அமிதமான வியர்வையும் உண்டாகும். இந்நிலைமையில் வயிறு கிரமமாக விம்மி வீங்கிப்போய், பரிசிப்பதற்கும் முடியாதபடி அவ்வளவு வலியுள்ளதாயிருக்கும். பருத்துப்போன க்ரந்திகள் வயிற்றில் தோலுக்கு அடியில் கையால் பரிசித்து உணரக்கூடியனவாயிருக்கும். அடிக்கடி வாந்தியுண்டாகும். பாதங்களில் வீக்கமும் ஏற்படும். வியாதி அதிகரித்து, உடலிளைப்பு விருத்தியாய் வரும்போது, குழந்தையின் முகத்தில் கடுகடுப்பு அதிகரித்து, அமைதியின்மையும் கடைசியில் அதிகமாகும்.

சிகித்ஸை

அங்கசோஷம் என்னும் உடலிளைப்பில், அதிலும் முக்கியமாய் போஷணைக்கியலாத உணவுகளால் உண்டான அந்நோயில், மருந்துகளைவிட பத்தியாஹாரங்களின் உபயோகமே அதிக பயன் தருவதாகும். எக்காரணத்தினாலான உடலிளைப்பிலும் ஏற்றஎளிதில் ஜீர்ணமாகும்—உணவும், சுத்தமான குளிர்ந்த காற்றோட்டமுள்ள இடத்தில் வாசமும், தேக பரிசுத்தமும் பொதுவாக அவசியமானவை.

குழந்தைக்குக் கொடுக்கப்படும் உணவு வெறும் அரிசி அல்லது மாப்பண்டத்தினாலான உணவாக இருக்கக்கூடாது. அதில் பருப்பு, நெய் முதலியவை அதிகம் கலந்திருப்பது நலம். அரிசிச்சாதத்தை விட கோதுமை மாவாலாகிய உணவும், பால் அதிகம் சேர்த்துப் பக்குவம் செய்த அன்னம் முதலியனவும் உபயோகமாயிருக்கும். ஆக்ஷேபமில்லாதவர்கள் இவ்விதக் குழந்தைகளுக்கு தினம் ஒரு முட்டையைக் கொடுத்து வந்தால் அதிக அனுகூலம் காணலாம். பெரியவர்கள் கூட நாளொன்றுக்கு இரண்டொரு முட்டைகளைப் பாலுடன் கலந்து உட்கொண்டு வரலாம்.

உடலிளைப்பில் வயிற்றுக்கடுப்பும் இருந்தால், குழந்தையானாலும், பெரியோராயினும் சவ்வரிசிக் கஞ்சியை அடிக்கடி பால் அல்லது மோர் கலந்து உணவாக உபயோகிப்பதுடன், இனிய ஆரஞ்சுப்பழச்சாறு அல்லது மாதுளம் பழச்சாற்றையும் தினத்துக்கு இரண்டு தடவை உட்கொள்வது நலம். மஹா ஜாதிபலாதி சூர்ணத்தை வேளைக்கு 10 அல்லது 15 நெல்லெடையாக நெய்யிற் கலந்து நாளொன்றுக்கு 3 அல்லது 4 முறை சாப்பிடுவதால் வயிற்றுக்கடுப்பு குணமாகும். அல்லது கனஸாரம் என்ற மருந்தை 3 அல்லது 4 மணிக்கு ஒருமுறை இரண்டு, மூன்று தேக்கரண்டியளவு உட்கொண்டாலும் வயிற்றுக் கடுப்பு தணியும்.

குடலில் கிருமிகள் சேர்ந்திருந்தால், கிருமிக்னவடி என்ற மாத்திரையை வேளைக்கு 3—அல்லது4—மாத்திரைவீதம் முதல்நாள் மூன்றுநான்குமுறை உட்கொண்டு மறுநாள் காலையில் சிறிது ஆமணக்கெண்ணெயைப் பாலில் கலந்து உட்கொண்டால், கிருமிகள் இருந்தால் வெளியாய்விடும். ஆமணக்கெண்ணெய்க்குப் பதில் த்ரிவ்ருத் குளிகை என்ற மாத்திரையை (3 முதல் 5-மாத்திரைகள்) உட்கொள்வதும் நலம். ஒருநாள் கிருமிகள் வெளிவந்தாலும் மறுபடி ஐந்நூறுநாட்கள் கழித்து அதேவிதம் கிருமிக்னவடியையும் த்ரிவ்ருத் குளிகையையும் உபயோகித்து விரேசனம் (பேதி) செய்விப்பதும் நல்லது. இக்காரணத்தாலான உடலிளைப்பில் போஷணையளிக்கும் பால், வெண்ணெய், பழங்கள், பாதுமைப் பருப்பு முதலிய சிறந்த உணவு வகைகளை உட்கொண்டு, அயுஷ்ய ரஸாயனம் போன்ற பலம் தரும

மருந்தையும் சிலநாள் தொடர்ந்து உபயோகித்து வரலாம்.

அதிஸாரம் என்ற அஜீரண பேதி ஏற்பட்டிருந்தால், நல் பொரியைப் பாலில் கலந்து பக்குவம் செய்து அதில் சிறிது பனங் கற்கண்டைப் பொடித்துக் கலந்து அதை அடிக்கடியும் உணவாகக் கொடுத்து வரலாம் அல்லது சவ்வரிசிக் கஞ்சியில் பால் அல்லது புளிப்பில்லாத மோர் கலந்து உப்பும் சிறிது சேர்த்து சாப்பிடலாம் பழரசங்களையும் உபயோகிக்கலாம், மஹாகாத்யாதி சூர்ணத்தையும், கனஸாரம் என்னும் மருந்தையும் மாற்றி உட்கொள்ளலாம். அதிஸாரம் நின்று போன பிறகு இப்பிணியால் உடற் போஷணைக்காகவும், பலம் விருத்தியாவதற்காகவும் லோஹ ரஸாயனம் என்னும் மருந்தை உட்கொண்டு வருவது மிக உபயோகமாயிருக்கும்.

க்ஷயரோகமோ, எலும்புருக்கி நோயோ உடலிளைப்புக்குக் காரணமாயிருந்தால், ராஜமிருகாங்கம் என்னும் மருந்தும், மௌக்திக பஸ்மமும் முறையே அக்கோளாறுகளில் உபயோகிக்கக் கூடிய சிறந்த ஔஷதங்கள். இவ்வியாதியுள்ளவருக்கு வெள்ளாட்டுப்பால், கோதுமைக்கஞ்சி, பருப்பு ரசம், (வழக்கமுள்ளவர்களுக்கு) மாம்ஸரஸம், முட்டை பழரஸங்கள் முதலிய உணவுகளைக் கொடுத்து தாது போஷணைக்கு அனுகூலம் செய்துவர வேண்டும். அவர்களுக்குப் பயத்தைப் போக்கி, மனத்தென்பு உண்டுபண்ண உற்சாகம் அளித்துவருவதும் வெகு அவசியம்.



கரடு, முரடான ரஸ்தாக்களில் எந்தவிதமான அகிர்ச்சியுமின்றி, ஆயாசமேற்படாமல் முன் சக்கரத்தில் ஸ்பிரிங்குகளை அமைத்து சைக்கிள் சவாரியைச் சந்தோஷகரமானதாகச் செய்வதில் முனைந்து, அதில் வெற்றியும் கண்டவர் மிஸ்டர் ராபர்ட் ஸ்காட்லி என்ற பிரிட்டிஷ்காரர். இவர் முதல் மகா யுத்தத்தில் சேர்ந்து சேவைசெய்து காயமுற்றவர். இந்தப் புதிய முன் சக்கர சைக்கிள் சாதனம பிரிட்டன், கனடா, அமெரிக்கா முதலிய இடங்களில் சகலவிதமான முரட்டு ரஸ்தாக்களிலும் உபயோகித்து திருப்தி கூறியுள்ளார்கள். 63,000 மைல் சவாரிபோயும் பழுதடையாத முன் சக்கர தோற்றம்.

கிழவனின் தந்திரம்

எஸ். குமாரராஜ்

பாளையூர் ஒரு குக்கிராமம். அங்கு ஒரு கிழவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு முருகன், மணியன் என்று இரு பிள்ளைகள் இருந்தனர். கிழவன் வயது காலத்தில் வெயிலில் நடந்து திரிந்து சம்பாதிக்க முடியாததால் தன் குடிசைக்குள் இருந்து கொண்டு சர்க்காவில் நூல் நூற்று ஜீவனம் செய்து வந்தான் அப்பிள்ளைகள் அவனுக்கு உதவி செய்து வந்தனர்.

ஒரு நாள் ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் அந்தப் பிரதேசத்தில் பிரவேசித்துக்கிராமங்களில் கொள்ளையடித்து வந்தார்கள். அக்கூட்டத்தினரைக் கண்டு அவ்வூரிலுள்ள ஆண்களும்,பெண்களும், சிறு பிள்ளைகளும், பெரியவர்களும் அலறிக்கொண்டு அருகிலிருந்த ஒரு காட்டில் ஒளிந்து கொண்டார்கள். அக்கூட்டத்தினர் கொள்ளையடிப்பது மாத்திரமின்றி எதிர்ப்பட்டவர்களைக் கொல்வதும் வழக்கம்.

அந்தக் கிழ மனிதன் ஓட முடியாதிருந்தான். ஆனால் தன் மக்களை ஒளிந்துகொள்ளும்படி அனுப்பிவிட்டு தன் வீட்டுப் பின்புறத்தில் உள்ள ஒரு வைக்கோற் போரில் மறைந்துகொண்டான். அப்பொழுது திருடர்கள் ஒவ்வொரு வீட்டிலும் சென்று தாங்கள் கண்ட விலையுயர்ந்த பொருள்களை எடுத்துக் கொண்டனர். அவர்களில் ஒருவன் கிழவனுடைய வீட்டில் கொல்லைப்புறத்திற்குப் போகும் சந்தின் வழியாக வரும்படி நேர்ந்தது. அவன் வாசற்படியில் நின்று உள்ளே நோக்க அங்கு வைக்கோற் போர் தெரிந்தது. அதன் பக்கத்தில் கிணறும், நீர் நிறைந்துள்ள ஒரு தொட்டியும், மரத்தூணும் இருந்தன. திருடன் ஏறிக்கொண்டு வந்த குதிரை திருடப்பட்ட சாமான்களின் சுமையைச் சுமந்துகொண்டு வந்ததால் களைத்துப் போயிருந்தது. அதைத் திருடன் மரத் தூணில் கட்டி, தொட்டியிலிருந்த தண்ணீரைக் குடிக்கும்படிச் செய்தான். பின்னர் வைக்கோல் போருக்குச் சென்று அதனருகே குவிந்திருந்த புல்லைக் கொண்டு வந்து அதற்குப்போட்டான். "இன்று எனக்கு நல்ல அதிர்ஷ்டம்தான். கடவுள் எனது குதிரைக்கும் எனக்கும் வேண்டிய பொருளை அருளியிருக்கிறார்" என்று திருடன் சொல்லிக்கொண்டு நன்றாய் தண்ணீர் குடித்தான். குதிரை புல் தின்று களைப்பாறினபோது அவன் வீட்டுக்குள் கொள்ளையடிக்கச் சென்றான்.

திருடன் போனபிறகு கிழவன் மெதுவாக எட்டிப் பார்த்தான். ஒருவரையும் காணாததால், வெளியே வந்து குதிரையையும், அதன் மேலுள்ள பைகளையும் பார்த்து, "நமது வறுமை இறைவனருளால் இன்றோடு ஒழிந்தது. இந்தப்பைகளையெல்லாம் கிணற்றுக்குள் தள்ளிவிட்டு, குதிரையை விரட்டிவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டே அவன் ஒளிந்திருந்த இடத்திலிருந்து பாம்புபோல் நகர்ந்து வெளியே வந்து குதிரையை கிணற்றின் ஓரத்தில் நிற்கவைத்து பைகளையெல்லாம் கிணற்றுக்குள் தள்ளினான். பின் குதிரையின் கட்டையவிழ்த்து அதை விரட்டிவிட்டு மறுபடியும் ஒளிந்துகொண்டான்.

திருடன் கிழவன் வீட்டில் ஒன்றுமில்லாததைக் கண்டு பக்கத்து வீடுகளுக்குச் சென்று அகப்பட்டவற்றை மூட்டை கட்டிக்கொண்டு குதிரை இருந்த இடத்திற்கு வந்தான். குதிரையைக் காணவில்லை. பயமும் ஆச்சரியமும் அடைந்தான். "இந்த ஊரில் தான் ஒருவரும் இல்லையே. அப்பொழுது யார்தான் இந்தக் குதிரையை அவிழ்த்து விரட்டியிருப்பார்கள்? ஒருவேளை பேய்பிசாசுதான் இந்த வேலைசெய்திருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு குதிரையின் கால் தடத்தைப் பார்த்து அது போன வழியே சென்று ஊருக்கு வெளியே போய்விட்டான்.

கொள்ளைக் கூட்டத்தினர் போனபிறகு கிராமவாசிகள் ஊருக்குத் திரும்பினர். கிழவன் நடந்ததை ஒருவருக்கும் சொல்லவில்லை. கிணற்றில் தண்ணீர் இறைக்க வருகிறவர்கள் அந்தப் பைகளையும் சேர்த்து இழுத்துவிடுவார்

களோ என்று நினைத்து, பைகள் இருக்கின்றனவா என்று அடிக்கடி பார்த்துக் கொள்வான்.

மாதம் ஒன்று சென்றது. அடுத்த கிராமத்தில ஒரு திருவிழா நடந்தது. அவ்வூர் ஜனங்களெல்லாம் திருவிழாவிற்குச் சென்றூர்கள். முருகனும், மணியனும் போக வேணுமென்றூர்கள். ஆனுல கிழவன் அவர்களைத் தடுத்து விட்டான். எல்லாரும் போன பிறகு இரகசியத்தை அவர்களிடம் சொன்ஞன்.

அவர்கள் ஒரு பெரிய கயிற்றை எடுத்துக்கொண்டு கிணற்றண்டை சென்றூர்கள். அவர்களில் ஒருவன் கயிற்றின் முனையைக் கையில பிடித்துக் கொண்டு கிணற்றில இறங்கி பைகளைக் கயிற்றில் கட்டி விட்டான் அவ்வாறு எலலாப் பைகளையும் வீட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அந்தப் பொருள்களைக் கொண்டு கிழவன் முருகனுக்கும், மணியனுக்கும் வியாபாரம் செய்யக் கற்றுக் கொடுத்தான். அவர்கள் வியாபாரத்தில் நல்ல லாபம் அடைந்தனர். மூவரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

சகோதரன் ஹரி,
"குலிஸ்தான்"
கார், பம்பாய் 21.

"ஆனந்த விகடன்" காரியாலயம் பிரதம அக்கௌண்டென்ட் ஸ்ரீ எஸ். ஆர். வாஞ்சிநாதய்யர் குமாரி சௌ. சீதாலக்ஷ்மிக்கும் குடவாசல் ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி அய்யர் குமாரர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதிக்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்

காஷ்மீர்-குஸும்

வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க

குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நருமண சந்தனக்கழிம்பு

மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்

ஸோல்ஏஜண்ட்: யுனைடட் கன்ஸர்ன் - 54, பந்தர் தெரு, மதராஸ்.

டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

பீம-வீர்

"Bheema-Veer"



JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40—நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	... ...	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத		,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	... ...	,, 3.
ஆயுள் பலன் எழுத	... ...	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி பதவி ஏற்புக்காக தர்பார் மண்டபத்திற்கு வருகிறார். ராஜாஜி பக்கத்தில் இருப்பது அவரது குமாரி ஸ்ரீமதி நாமகிரி. ராஜாஜிக்கு இடது பக்கத்தில் மவுண்ட்பாட்டன் பிரபுவும், அவரது குமாரி பமீலா மவுண்ட்பாட்டனும் வருகின்றனர். படத்தின் முன்னிலையில் சுவரில் சாய்ந்தவண்ணம் இருப்பது சுகாதார மந்திரி ஸ்ரீமதி அம்ருதகௌர். அவரது பக்கத்திலும் மவுண்ட்பேட்டனுக்கு முன்னும் இருப்பது ஸ்ரீமதி இந்திரா காந்தி.



ராஜாஜி பதவி பிரமாணத்தை பிரதம நீதிபதிமுன்பு எடுத்துக்கொள்கிறார். அவருக்கு இரு புறங்களிலும் மந்திரிகள் வரிசையாக நிற்பதை பார்க்கலாம்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அண 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸவரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் 179 SEA ST., COLOMBO.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—	திருச்சி கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அண 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபாற் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வதீ ஸ்தோத்ரம் ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்

பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

இந்த முக்கிய அறிவிப்பை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

லக்ஷக்கணக்கானவர்களுக்கு இது உதவியளிக்கும்.

பிரிய வாசகர்களே. நான் ஒரு நாட்டு வைத்தியனோ அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல ஆனால், என் துர் நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்பாக்கியன் நான் கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் பல கஷ்டங்கள் ஏற்பட்டு முடிவில் எனது வலிமை முழுதும் இழக்க நேரிட்டது.

நாளுக்கு நாள் நான் மிகவும் பலவீனமடைந்து வந்தேன். ஹிருதயத் துடிப்பு அதிகரித்தது அடிக்கடி கிறுகிறுப்பும் மயக்கமுமாக வந்தது அந்தரங்கமாக ஆயிரக் கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்துகொண்டு பார்த்தேன் ஒருவித குணமும் ஏற்படவில்லை இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன்

அதிர்ஷ்டவசமாக வேலை நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத் தோன்றிய என்மேல் அவர் கருணை கொண்டு என்னைப்பற்றி விசாரித்தார் சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச் சொல்லும்படி தூண்டியதால் அவரிடம் மறைக்காமல் என் தேக நிலையின் உண்மையைத் தெரிவித்தேன் மஹாத்மா என்மேல் பச்சாதாபம்கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக் கற்பித்தார் அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளை சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்த பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்.

பிரிய வாசகர்களே! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன் 7-வது தினமே எனக்கு இளமை திரும்பி விட்டது எனது வலிமையைப் பற்றி நான் இப்பொழுது பெருமை கொள்ளுகிறேன் சில டோஸ்கள் சாப்பிட்டதுமே வியாதி சற்று குறைந்தாலும் மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன் என் ஒல்தினம் 4 சேர்பால் ஜீரணிக்க முடிந்தது என்கண்கள் பிரகாசம்பெற்றன முகத்திற்கு அலாதி ஜேஸ் ஏற்பட்டது தேகத்தில் புதிய பலமும் தேக திடமும் உண்டாயிற்று ஊருக்குத் திரும்பியதும் இதை நான் அநேகருக்குக் கொடுத்துப் பரிக்ஷித்ததில் வலிமையின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று

பொதுமக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன் தேக திடம் இழந்து ஆயிரக் கணக்கில் செலவழித்தும் குணம் பெருதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது நிண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு அயல் நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்ப வேண்டும்

இளமை அளிக்கும் மாத்திரைகள் 21 தினங்களுக்கு	ரூ.	5-0-0
மேலே பூசுவதற்குத் தைலம்	ரூ.	5-8-0

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது கிழவர்கள் யுவர்கள் யாவருக்கும் ஏற்றது சொந்த லாபத்திற்கு விளம்பரம் செய்யவில்லை மனித சமூகத்தின் நன்மைக்கே விளம்பரம் செய்யப்படுகின்றது வெளி நாட்டு ஆர்டர்களுடன் முன் பணம் தேவை

குணத்திற்கு உத்தரவாதம் இந்த மருந்தினால் உங்களுக்கு குணமேற்படாவிட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன் ஆயிரக் கணக்கான டாக்டர்கள் இதை சிபார்சு செய்கிருர்கள் எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்.

முக்கிய அறிவிப்பு நரம்புத் தளர்ச்சி வலிமையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும்தான் இம்மருந்து மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி மேலும் இது நல்ல ரத்த விருத்தியளிக்கிறது

ஆங்கிலத்தில் எழுதவும்: **THE MANAGER.**

Dar-Ul-Shafa - Golian (Regd)

Batala, East Punjab.

மானேஜர்: தார்-உல்-ஷபா கோலியான் (ரிஜிஸ்டர்டு)

படாலா, கிழக்கு பஞ்சாப்.

மதராஸ் பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்:—(1) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. (2) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ். (3) மெஸர்ஸ் வாஸன் டிரக் ஸ்டோர்ஸ், ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் மதராஸ். (4) மெஸர்ஸ் மில்டன் & மிலலர், 157, பிராட்வே, மதராஸ்.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினுலும் எவ்வித நோயானுலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினுல் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,

6, Panchpota, BENGAL.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No 2314.

தரகரை நம்பினால் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்றாம் மனிதரை நம்பினால் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு **சகாவான** வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வரும்படி கிடைக்கும் **இடத்திற்கே** அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனால் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியரபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

ஸூரஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற
வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், : : சென்னை.